# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 44 — 1973 ජනවාරි 26 වැනි සිකුරාදා — 1973 01.26

44 ஆம் இலக்கம் — 1973 ம் ஆண்டு சனவரி மாதம் 26 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I : தொகுதி (II அ)—விளம்பரங்கள்

( ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன )


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 69 | பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 80 |


## பதவிகள்—வெற்றிடம்

*" ஸ்ரீ லங்கா ( இலங்கை ) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "*

1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பது அரசாங்க ஒழுங்கு விதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.

2. சேவைக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கருமமுறைக் கைநூலின் ஒழுங்குவிதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.

3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச்சம்பளத்தில் இல்லாதவர்களையொழித்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத வீதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்த வேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சத வீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அரசாங்கம் அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.

(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்த வேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.

(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அரசசேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்தீவின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.

4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/ உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு, நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின் தகுதிகாண்/ சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.

(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவோர் என்னும் நிபந்தனைக்குட்படல் வேண்டும்.

(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.

(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் பிறவற்றுடன் க. பொ. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்தே அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர் விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.

---

**முக்கிய அறிவித்தல்**

ஸ்ரீலங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் வாராந்த அறிவித்தலின் பகுதி I தொகுதி (II அ) விலும் (II ஆ) விலும் பிரசுரிக்கப்படும் எல்லா அறிவித்தல்களும் அவ்வறிவித்தல்கள் பிரசுரமாகும் வாரத்திற்கு முந்திய புதன்கிழமை நண்பகல் 12.00 வரையும் ஏற்றுக்கொள்ளப்படும். குறிக்கப்பட்ட திகதிக்கும் நேரத்திற்கும் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் யாவும் எதுவித காரணத்தை முன்னிட்டும் பிரசுரத்திற்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு திசெம்பர் மீ 15 ந் உ.

*குறிப்பு.*—சிங்கள மொழி மூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சி சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

5. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரஜையாகவிருப்பவராகும்.

6. **யுத்தசேவைச் சலுகை.**—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப் பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளை விட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களுக்கும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ம் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.

7. **பிற தேவைகள்.**—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினால் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந்நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்றோவெனவுங் கூறல் வேண்டும்.

(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்க வேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இது விடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.

(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப்பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனால் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.

(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின், அப்பரீட்சார்த்திக்குந் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.

(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

8. **தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.**—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியன சம்பளத்துடன் அடங்கியது.

---

**சௌக்கியத் திணைக்களம்**

சிவில் மருத்துவக் களஞ்சியத்தில் 3 ஆம் தர முகாரிப்பதவிகள்

சௌக்கியத் திணைக்களத்தின் சிவில் மருத்துவக் களஞ்சியத்தில் 3 ஆம் தர முகாரிப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் இதன்கீழ் கொடுக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் செய்யப்பெற்று சௌக்கிய சேவைகள் பணிப்பாளர், த. பெ. இலக்கம் 500, கொழும்பு 1 என்ற முகவரியில் 1973.02.26 ஆந் திகதிக்கு முன்னர் வந்தடையுமாறு அனுப்பப்படல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—ரூபா 3,450—90×12—4,530 (ஆண்டொன்றுக்கு திரட்டிய சம்பளம்)

3. **வயதெல்லை.**—விண்ணப்பம் முடிவுறுந்தறுவாயில் திகதியில் 21 வயதுக்குக் குறையாதவரையும் 35 வயதுக்கு கூடாதவராயும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு.**—அரசாங்க சேவையிலுள்ளவர்களுக்குக் கூடிய வயதெல்லை பொருந்தாது.

4. **கல்வித்தகைமைகளும், பிற தகைமைகளும்.**—(1) கல்வி : (அ) கணிதம், பௌதிகவியல் உட்பட சி. க. த. பத்திரம் ; அல்லது

(ஆ) 2 அமர்வுகளுக்கு மேற்படாது சிங்களம்/தமிழ், பௌதிகம், கணிதம் மேலும் மூன்று பாடங்கள் உட்பட க. பொ. த. (சாதாரண) பத்திரம்.

(2) **உயர்தொழில் தகைமைகள்.**—கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் பத்திரப் பரீட்சை (மின்சக்தி, இயந்திரம் தொடர்பான) அல்லது அதற்குச் சமமானது.

**குறிப்பு.**—மயக்கமருந்து தொடர்பான சாதனங்கள், பொதுவான சிகிச்சைச்சாலைச் சாதனங்கள், வைத்தியசாலைச் சாதனங்கள் ஆகியவற்றைப் பழுதுபார்த்தலில் அவராது தகரவேலை, காய்ச்சியிணைக்கும் வேலை, தச்சுவேலை ஆகியவற்றில் அனுபவமுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

5. **சேவை நிபந்தனைகள்.**—இப்பதவிகள் நிரந்தரமானவையும் நியமனங்கள் அ. சே. ச. நி. அடிப்படையில் அமையும். உபகாரச் சம்பள உரித்துடையனவுமாகும். வி. அ. ச. நிதிக்கு உதவுதொகை செலுத்தப்படல் வேண்டும்.

6. அபேட்சகர்கள் தங்கள் விண்ணப்பங்களோடு பின்வருவனவற்றின் பிரதிகள் (மூலப்பிரதிகள் அல்ல) இணைத்தல் வேண்டும்.

(அ) பிறப்புச்சாட்சிப்பத்திரம் (ஞானஸ்நானப் பத்திரம் அல்லது பாடசாலைப் பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்படும் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா, (பிறப்புப் பதிவு செய்யப்படாத அபேட்சகர்களின் விடயத்தில்) பதிவாளர் அதிபதியினால் வழங்கப்படும் பிறப்புச் சாட்சிப் பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஆ) உயர் கல்வித் தராதரப் பத்திரம்.

(இ) தொழில்நுட்பத் தகைமைப் பத்திரம்.

(ஈ) அனுபவம் பற்றிய பத்திரம்.

(உ) அபேட்சகரின் நடத்தைபற்றி அண்மையில் பெற்ற 3 சான்றிதழ்கள் (ஏற்கெனவே அரசாங்க சேவையில் உள்ளவர்கள் அத்தகைய சான்றிதழ்களை அளிக்குமாறு வேண்டப்படமாட்டார்).

7. அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க ஆதரவிலுள்ள நிறுவனங்களில் உள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவர்களின் பொறுப்பதிகாரிக்கூடாக அனுப்பப்படல் வேண்டும்.

8. விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இந்த அறிவித்தலின் தேவைகளுக்கு இணங்க ஒழுகாதவர்களின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. இந்த வர்த்தமானியின் 1 ஆம் பகுதி 2 ஆம் பிரிவின் ஆரம்பத்தில் பிரசுரிக்கப்பெற்ற அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படுகிறார்கள்.

ஜி. அமரசேன,
பிரதிப் பணிப்பாளர் (நிருவாகம்),
சௌக்கிய சேவைப் பணிப்பாளருக்காக.

த. பெ. இலக்கம் 500,
காரிமுக்ச் செயலகம்,
கொழும்பு 1

### விண்ணப்பப் படிவம்

**சிவில் மருத்துவக் களஞ்சியத்தில் 3 ஆந் தர முகாமைப்பதவிகள்**

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில் :—————.
2. நிரந்தர முகவரி :—————.
3. பிறந்த திகதியும் விண்ணப்பக் கடைசித் திகதியன்று வயதும் :—————.
பிறந்த திகதி...........வருடங்கள்...........மாதங்கள்.................நாட்கள்.
4. நாட்டினம் :—————.
(வம்சாவழி காரணமாகவா அல்லது பதிவு காரணமாகவா இலங்கையர் என்பதைக் குறிப்பிடுக).
5. அரசாங்க சேவையில் அல்லது அரசாங்க ஆதரவிலுள்ள நிறுவனங்களில் வேலையிலிருப்பின் வகிக்கும் பதவியும் வேலை இடமும் :—————.
6. கல்வித் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—————.
7. தொழில்நுட்பத் தகைமைகள் பற்றிய விபரங்கள் :—————. (வெற்றிகரமாகப் பூர்த்தி செய்த பயிற்சி நெறிகள் மாத்திரம்).
8. பின்வருவனவற்றிலுள்ள அனுபவம் பற்றிய விபரங்கள் :—
(1) மயக்க மருந்து தொடர்பான சாதனங்கள், சாதாரண சத்திரசிகிச்சைச் சாலைச் சாதனங்கள், வைத்தியசாலைச் சாதனங்கள் :—————.
(2) தகரவேலை, காய்ச்சியிணைக்கும் வேலை, தச்சுவேலை : —————.
9. பிற தகைமைகள் பற்றிய விபரங்கள் ஏதுவுமிருப்பின் : —————.

இந்த விண்ணப்பத்தில் என்னால் அளிக்கப்பட்ட விபரங்கள் உண்மையானவை என்றும், சரியானவை என்றும் உறுதிப்படுத்துகிறேன். என்னால் அளிக்கப்பட்ட விபரங்கள் பொய்யானவை அல்லது பிழையானவையெனத் தெரிவுக்கு முன்னர் கண்டுபிடிக்கப்படின் தகைமை நீக்கம் செய்யப்படுவதற்கும் தெரிவிக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்படுமிடத்து சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கும் ஆளாவேன் என்பதனை நான் அறிவேன்.

.....................................
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

திகதி :—————.

1-845—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

### நீர்ப்பாசனத் திணைக்களம்

#### பயில்நிலை வரைஞர் பதவிகள்

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பயில்நிலை வரைஞர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இங்கு இணைக்கப்பட்டுள்ள படிவத்தில் உள்ளபடி தயாரிக்கப் படவேண்டிய விண்ணப்பங்கள் பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்பு-7 எனும் விலாசதாரருக்கு 1973, ஜனவரி 31 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக அனுப்பப்படுதல் வேண்டும். இத் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் எவ்விண்ணப்பமும் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைக்கப் பெற்றமைபற்றி அறிவிக்கப்பட மாட்டா.

**2. சம்பளமும் நியமனநியதிகளும்**

(i) பயில்நிலை வரைஞர் பதவி தற்காலிகமானதும், வருடாந்தம் ரூ. 3,000—3×90—ரூ. 3,270 திரட்டிய சம்பள அளவுத் திட்டத்தைக் கொண்டதுமாகும். பயில்நிலை வரைஞர், வகுப்பு 2, வரைஞர் தெரிவிற்காக நடைபெறும் திணைக்களப் பரீட்சையில் சித்தியெய்துமிடத்து வகுப்பு 2 இல் வெற்றிடங்கள் தோன்றும் பொழுதும் உள்ள பொழுதும் வகுப்பு 2 வரைஞராக ரூ. 3,576—20×144—6,456 (ரூ. 5,304/- முன்னர் திறமைத் தடை) திரட்டிய சம்பள அளவுத்திட்டத்தில் நியமனம் பெறத் தகுதிபெறுவர்.

(ii) திணைக்கள வரைதல் அலுவலகங்களில் பயிற்சி நெறிக்காலம் 2 வருடங்களாகும்.

குறிப்பு—வரைஞர் நெறியில் முழுநேர ஒருவருடபயிற்சி நெறியை அல்லது கட்டட அமைப்பில் 3 வருட பகுதி நேர நெறியை கட்டுபெத்தை சாதனைத் தொழினுட்பவியல் நிறுவகத்தில் அல்லது ஸ்ரீ லங்கா குடியரசினால் அங்கீகரிக்கப்பட்ட வேறு எந்நிறுவனத்திலும் ஆட்சேர்ப்பு நேரத்தில் ஏற்கனவே வெற்றிகரமாக முடித்த பயில்நிலை வரைஞர் ஆண்டொன்றுக்கு ரூ. 3,090/- சம்பள அளவுத்திட்டத்தில் வைக்கப்படுவர்.

(iii) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள, நீர்ப்பாசனத் திணைக்களத்தில் வகுப்பு 2 வரைஞராக நியமனம் பெறத் தகைமை பெறுவதற்கு தமது படிப்பை நேர்மையாகத் தொடர்வார் எனவும் பயிற்சியை முடித்த பின்னர், வேண்டப்படின் நீர்ப்பாசனத் திணைக்களத்தில் 5 வருடங்களுக்குக் குறையாத காலத்திற்கு வகுப்பு 2 வரைஞராகக் கடமையாற்றுவார் எனவும் பயிற்சியை ஆரம்பிப்பதற்கு முன்னர் நீர்ப்பசனத் திணைக்களத்துடன் ஓர் உடன்படிக்கை செய்து கொள்ளுமாறு வேண்டப்படுவர். உடன்படிக்கையின் நியதிகளும் நிபந்தனைகளும் தகுந்த முறையில் பேணப்படும் பொருட்டு பயிற்சியாளரும் அவரது பெற்றோர் அல்லது சட்டரீதியான பாதுகாவலரும் ரூ. 2,000/- தொகையினதான ஓர் முறியில் இருபிணையாளிகளுடன் சேர்ந்து கொள்ளுமாறு வேண்டப்படுவர்.

(iv) தெரிவு செய்யப்பட்ட அபேட்சகர்கள், இறுதியாக நியமனம் பெறுவதற்கு முன்னர் நாட்டின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கு ஏற்ற உடல் நிலையை அவர்கள் கொண்டுள்ளார்களா என்பதை உறுதிப்படுத்தும் பொருட்டு அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரினால் நடாத்தப்படும் மருத்துவ சோதனையொன்றில் தேறியிருத்தல் வேண்டும்.

3. **வேண்டப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் தான் பின்வரும் தகைமைகளைக் கொண்டுள்ளவரெனத் திருப்திகரமாக நிரூபித்தல் வேண்டும் :—

(1) ஸ்ரீ லங்கா (இலங்கை)ப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(2) 1973 பெப்ருவரி 15 ம் திகதியன்று 18 வயதிற்குக் குறையாதவராயும் 24 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.

(3) சிறந்த ஒழுக்கமுடையவராயிருத்தல் வேண்டும்.

(4) கட்டுபெத்தை சாதனைத் தொழினுட்பவியல் நிறுவகத்தில் அல்லது ஸ்ரீ லங்காக் குடியரசினால் அங்கீகாரம் பெற்ற அதனையொத்த வேறு எந்நிறுவனத்திலும் வரைஞர் நெறியில் முழு நேர ஒரு வருடப் பயிற்சி நெறியை அல்லது கட்டட அமைப்பில் 3 வருட பகுதி நேர நெறியை முடித்தவராக இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரிகள் பின்வரும் சாதனங்களின் பிரதிகளை (மூலங்களையல்ல) விண்ணப்பங்களுடன் இணைத்தல் வேண்டும்.

(அ) பெற்ற உயர் கல்வித் தகைமைச் சான்றிதழ்களும் தொழினுட்பத் தகைமைச் சான்றிதழ்களும்.

(ஆ) பிறப்புப் பதிவுக் சான்றிதழ். (கல்விப் பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சமய திட்சைச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது).

(இ) அண்மையில் பெற்ற மூன்று நற்சான்றிதழ்கள். (அவற்றிலொன்று விண்ணப்பத்தாரி கடைசியாகக் கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெறப்பட்டதாயிருத்தல் வேண்டும்.

**குறிப்பு**—இச்சாதனங்களினதும் நற்சான்றிதழ்களினதும் பிரதிகள் திருப்பியனுப்பப்பட மாட்டா.

5. ஸ்ரீ லங்காக் குடியரசில் அரசாங்க சேவையில் அல்லது உள்ளூர் அதிகாரிகளின் சேவையிலிருக்கும் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களை தத்தம் திணைக்களத் தலைவர்களினூடாகச் சமர்ப்பித்தல் வேண்டும்.

6. அபேட்சகர்கள் தமது செலவில் கொழும்பில் நடைபெறும் நேர்முகப் பரீட்சையொன்றுக்குச் சமூகமளிக்குமாறு வேண்டப்படுவர்.

7. விண்ணப்பத்தில் காணப்படும் எக்கூற்றும் பிழையானவை எனக்காணப்படின் தெரிவிற்கு முன்னராயின் விண்ணப்பதாரி தகுதியற்றவராகுவதற்கும் தெரிவிற்குப் பின்னராயின் சேவையிலிருந்து விலக்கப்படுவதற்கும் பாத்திரராவார்.

8. இவ்வர்த்தமானியில் 1 ஆம் பகுதி 2 ஆம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ள அரசினர் சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கு அமையும் பொது நிபந்தனைகளுக்கும் கவனம் கோரப்படுகின்றது.

பி. எச். பெரேரா,
நீர்ப்பாசனப் பணிப்பாளர்.

நீர்ப்பாசனத் திணைக்களம்
கொழும்பு-7.
1973.01.13.

**நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பயில்நிலை வரைஞர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்**

மு. கு: விண்ணப்பத்தைக் கொண்டுள்ள காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் "பயில் நிலை வரைஞர் பதவிக்கான விண்ணப்பம்" எனக் குறிப்பிடப்பட்டு, பணிப்பாளர், நீர்ப்பாசனத் திணைக்களம், கொழும்பு 7 என்னும் முகவரிக்குப் பதிவுத் தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

1. முழுப் பெயர் (பெரிய எழுத்துக்களில்)
   (அ) சொந்தப் பெயர்.————
   (ஆ) பிற பெயர்கள்.————

2. அஞ்சல் முகவரி.————

3. சாகியம்.————

4. (அ) விண்ணப்பத்தாரியின் பிறந்த திகதியும் இடமும்.————
   (பிறப்புச் சான்றிதழின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)

   (ஆ) பின்வருவோர் பிறந்த இடம் :—
   (i) விண்ணப்பதாரியின் தந்தை.————
   (ii) விண்ணப்பதாரின் தந்தை வழிப்பாட்டன்.————
   (iii) விண்ணப்பத்தாரின் தந்தை வழிப்பூட்டன்.————

5. விவாகம் செய்தவரா செய்யாதவரா ?.————

6. கல்வித் தகைமைகள்.————
   (சாதனங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

7. தொழினுட்பத் தகைமைகள்.————
   (சாதனங்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்)

8. பாடசாலையிலிருந்து விலகிய பின்னர் பார்த்த வேலையும் பெற்ற பயிற்சியும் அல்லது இவற்றில் எவையேனும் பற்றிய விபரங்கள்.————

9. அரசாங்க திணைக்களத்தில் அல்லது அரசாங்கக் கூட்டுத்தாபனத்தில் முன்னர் வேலை பார்த்திருந்தால் விலகியதற்கான காரணம்.————

10 சட்டமுறை நீதிமன்றத்தில் யர்தேனும் குற்றவியல் தவறுக்காகக் குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டிருந்தால் குற்றமும் தண்டனை பற்றிய விபரங்கள்.————

11. நற்சாட்சிப் பத்திரங்கள் கொடுத்துதவிய மூவரின் பெயர்களும் பதவிகளும் முகவரிகளும்.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்ததுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன்.

————
விண்ணப்பத்தாரின் கையொப்பம்.

திகதி.————

1-870—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

**தகவற் பகுதியின் திரைப்படப் பிரிவில் தயாரிப்பாளர் (விவரணத் திரைப்படங்கள்) பதவி**

தகவற் பகுதியின் திரைப்படப் பிரிவில் தயாரிப்பாளர் (விவரணத் திரைப்படங்கள்) பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவங்களில் எழுதப் பெற்று, பதில் செயலாளர், தகவல், ஒலிபரப்பு அமைச்சு, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு 1, எனும் முகவரிக்கு பின்வரும் தேதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாகப் பதிவு அஞ்சலில் அனுப்பப்படல் வேண்டும். கடித உறையின் இடது கரை மேல் மூலையில் "தயாரிப்பாளர் (விவரணத் திரைப்படங்கள்)" என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—28, பெப்ருவரி, 1973 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—07, மார்ச்சு, 1973.

குறிப்பு.—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலேற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாளிகளாவர்.

(ii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள், விரும்பின், தமது விண்ணப்பங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அவலகத்திற்கு, இலங்கை தகவல் ஒலிபரப்பு அமைச்சின் பதிற் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பிவைக்கலாம்.

(iii) மருத்துவப் பரிசோதனையும் பயணச் செலவும்.—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட, இலங்கைக் குடியரசின் கீழ் ஊழியம் புரியும் அலுவலர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா வென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவப் பரிசோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவப் பரிசோதனைக்காகிய கட்டணத்தும் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட அலுவலரே செலுத்தல் வேண்டும்.

2 நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.—இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் மூன்று வருட காலத்திற்குத் தகுதி காண் அடிப்படையில் பணிபுரிவார். மேலும், தெரிவு செய்யபடும் அபேட்சகர் பொதுச் சேவை சேமலாபநிதிக்குக் கொடுப்பனவு செலுத்துமாறு வேண்டப்படுவார்.

குறிப்பு.—(i) 31.12.1971 ஆந் தேதியன்று அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியை வகித்துவந்த அரசாங்க அலுவலர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால், அவர் புதிய பதவியிலும் தொடர்ந்து தனது ஓய்வூதிய உரிமையை அனுபவித்து வருவார்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நிரந்தரமானதும், ஓய்வூதிய உரிமையுடையதுமான பதவியொன்றை வகித்துவரும் அரசாங்க சேவை ஊழியராகவிருப்பின், முதற்கண், அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இந்தப் பதவியில் பதில் அடிப்படையில் பணிபுரிவார்.

3. சம்பளமும் படிகளும்.—இப்பதவிக்குரிய திரட்டப்பட்ட சம்பள விகிதம் பின்வருமாறு—வருடாந்தம் ரூ. 7,440 10 × 360 உம் 7 × 480 உம் ரூ. 14,400 (ரூ. 11,520 க்கு முன்னர் வினைத் திறமைகாண் தடை உண்டு).

4. தேவையான தகைமைகள்.—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும், உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1973 பெப்ருவரி 28 ஆந் தேதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும், 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும்.
(அரசாங்க சேவையிலுள்ளோருக்கு மேல்வயதெல்லை ஏற்புடைத்தாகாது)

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக அல்லது அதற்குச் சமமான அல்லது அதிலும் உயர்ந்த தகைமையுடையவராயிருத்தல் வேண்டும்; அத்துடன்

(ii) (அ) 16 மி. மீ., 35 மி. மீ. திரைப்படங்களைத் தயாரித்தல், விவரணச் சித்திரங்கள், செய்திச் சுருள்கள், குறுபடங்கள் போன்றவற்றை நெறிப்படுத்தல் போன்ற திரைப்படக் கடமைகள் சகலவற்றிலும் ஆகக் குறைந்தது 6 வருட கால அனுபவம் பெற்றிருத்தல்.

(ஆ) படப்பிடிப்பு, படங்கழுவல், பதித்தல், தரப் படுத்தல், ஒலிப்பதிவு செய்தல் போன்ற சினிமாக்கலையின் பல கிளைகளைப் பற்றிய உன்னத அறிவும், திரைப்படத் தயாரிப்புச் சம்பந்த மான உபகரணங்களது செயற்பாடுகள் தொடர்பான அனுபவமும் பெற்றிருத்தல்.

(இ) மேலே குறித்த சினிமாக் கலைத் துறைகளில் ஒன்றில் அல்லது பலவற்றில் பெற்றுள்ள திறமைக்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் அளித்துள்ள பாராட்டுக்களைப் பெற்றிருத்தல்.

குறிப்பு.—தமது பதவிகளில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அரசாங்க திரைப்படப் பிரிவில் கடமையாற்றும் திரைப்பட அதிபர்கள், திரைப்படப் பிரிவின் கிளைத் தலைவர்கள், மேற்படி கல்வித் தகைமைகளைக் கொண்டிருக்காவிடினும், 4 (இ) (ii) "அ", "ஆ" பந்திகளின் கீழான தகைமைகளைக் கொண்டு விளங்குவார்களெனின் அவர்களின் விண்ணப்பங்களும் கவனத்துக்கெடுத்துக் கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் பத்திரங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும்பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (முக்கிய குறிப்பு.—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத்தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்கப்படமாட்டா).

(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்;

(இ) குணச் சான்றிதழ் இரண்டு இவற்றிலொன்று பாடப் பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்;

(ஈ) உயர் தொழிற்றகைமை அல்லது தொழிநுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(1) பத்திரங்களையாயினும் பத்திரங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது;

(2) பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க, அல்லது கூட்டுத்தாபன சேவையிலுள்ள அலுவலர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்கள/கூட்டுத்தாபனத் தலைவர்க்கூடாக அனுப்ப வேண்டும். எனினும், அவர்கள் தாம் அவ்வாறு விண்ணப்பம் அனுப்பிய தேதியை தகவல் ஒலிபரப்பு அமைச்சின் பதிற் செயலாளருக்கு விண்ணப்ப முடிவு தேதிக்கு முன்னர் நேரடியாக அறிவித்தல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் பதிற் செயலாளர், தகவல் ஒலிபரப்பு அமைச்சு என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இவ் அமைச்சிலுள்ள எந்த அலுவலருக்காயினும் நேராக அனுப்புதல் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை அறிவிக்கப்படும். விண்ணப்ப முடிவு தேதியிலிருந்து மூன்று வார காலத்துள் இந்த அறிவிப்புக் கடிதத்தைப் பெறாத விண்ணப்பதாரர் அதனை உடனடியாக தகவல் ஒலிபரப்பு அமைச்சின் பதிற் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இவ் ஏற்பாட்டுக்கமைய ஒழுகாத விண்ணப்பதாரரின், விண்ணப்பக் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

என். பி. விஜேரத்ன,
பதிற் செயலாளர்,
தாவல், ஒலிபரப்பு அமைச்சு.

தகவல், ஒலிபரப்பு அமைச்சு அலுவலகம்,
சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு 1,
13, ஜனவரி 1973.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

தகவற் பகுதியின் திரைப்படப் பிரிவில் தயாரிப்பாளர் (விவரணத் திரைப்படங்கள்) பதவி

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :————.

2. அஞ்சல் முகவரி :————.

3. பிறந்த தேதி :————.

4. விண்ணப்ப முடிவு தேதியன்று சரியான வயது :—
வருடங்கள்————. மாதங்கள்————. நாட்கள்————.

5. நீர் இலங்கைப் பிரசையா? அவ்வாறெனின், வம்சாவளி காரணமாகவா, பதிவு காரணமாகவா இலங்கைப் பிரசை எனக் குறிப்பிடுக :————.

6. பின்வருவோர் பிறந்த இடங்கள் :—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) தந்தை :————.
(இ) தந்தை வழிப் பாட்டன் :————
(ஈ) தந்தை வழிப் பூட்டன் :————

7. (அ) பால் :————.
(ஆ) விவாகமானவரா, தனியாளா, கைம்பெண்ணா, தாரமிழந்தவரா :————.

8. பின்வருவனவற்றில் சித்தியெய்திய அதி உயர்ந்த பரீட்சை :————.
(1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம்

9. 12 வயதிலிருந்து நீர் கல்வி பெற்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள் :—

| பொதுக் கல்வி | தொழிற் கல்வி |
|---|---|
| (1) ...................... | (1) ...................... |
| (2) ...................... | (2) ...................... |
| (3) ...................... | (3) ...................... |
| (4) ...................... | (4) ...................... |
| (5) ...................... | (5) ...................... |

10. விளையாட்டுத் துறையிற் பெற்ற திறமைகள், அத்துறையில் நீர் வகித்த பொறுப்புவாய்ந்த பதவிகள் என்பனபற்றிய விபரங்கள் :————.

11. (அ) நீர் கடன் தொல்லைகளிலிருந்து விட்பட்டுள்ளீரா? அல்லாது விடின் கடன்கள் தொகை என்ன? :————.

(ஆ) எப்போதாவது நீதி மன்றத்தில் குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா? அவ்வாறெனின், தேதிகள், நீதிமன்ற வழக்கு இல. என்பவற்றையும் குறிப்பிட்டு, முழு விபரங்கள் தருக :————.

12. கல்விசார், தொழில் சார், தொழில் நுட்பத் தகைமைகள் : (பெற்றுக்கொள்ளப்பட்ட சகல பட்டங்கள், விசேடத்துவங்கள், தொழில்சார், தொழில் நுட்பத் தகைமைகள், என்பவற்றின் விபரங்களையும், நிறுவனங்களின் பெயர்களையும் தருக.)————.

13. தற்போதைய தொழிலும், முன்னைய நியமனங்களும் (ஏதாவது இருப்பின்) அப் பதவிகளில் சேர்ந்த தேதிகளும், விலகிய தேதிகளும், இறுதியாகப் பெற்ற வருடாந்தச் சம்பளமும் குறிப்பிடப்பட வேண்டும்.) :

| பதவி | தொடக்கம் | வரை | வருடாந்தச் சம்பளம் ரூபா |
|---|---|---|---|
| | | | |

முக்கிய குறிப்பு.—அர்சாங்க சேவையிலிருந்து விலகியிருப்பின், அதற்கான காரணம் 15 ஆம் பந்தியின் கீழ் காட்டப்பட வேண்டும்.

14. விசேட தகைமைகள்.—அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட தகைமைகள்/அனுபவம் உள்ளனவா? அவ்வாறெனில், அவற்றின் விபரங்களைத் தருக :————.

15. ஏனைய விபரங்கள் :————.

16. இந்த விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் செம்மையானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், இங்கு கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையற்றவை அல்லது செம்மையற்றவை என, தேர்விற்கு முன்னர் கண்டு பிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பத் தகைமை அற்றுவிடுமெனவும், தேர்விற்குப் பின்னர் கண்டு பிடிக்கப்பட்டால் இழப்புப்பணக் கொடுப்பனவு எதுவுமின்றி பதவியிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிந்திருக்கிறேன்.

————,
விண்ணப்பகாரரின் ஒப்பம்.

தேதி :————.

அபேட்சகர் அரசாங்க சேவையில் உள்ளவரெனின், திணைக்களத் தலைவரின் அறிக்கை :————.

1-946—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

### கமத்தொழில் திணைக்களம்

இயந்திரவியலாளர் பதவி, தரம் I ம், II ம்

கமத்தொழில் திணைக்களத்தில், தொழிலாளர் தரத்திலுள்ள உலோக வேலை இயந்திரவியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் தகைமைகள் உள்ளவர்கள் விண்ணப்பிக்கலாம்.

2. **சம்பளமட்டம்.**—(i) உலோக வேலை இயந்திரவியலாளர் தரம் I.—வருடாந்தம் ரூபா 3,240—12 × 60—ரூபா 3,960 (திரட்டியது) என்று அமையும்.

(ii) II ம் தர இயந்திரவியலாளர்.— வருடாந்தம் ரூபா 2,640—15 × 60—ரூபா 3,540.

3. **வயதெல்லை.**—தரம் I க்கு வயதெல்லை 25 க்கும் 35 க்கும் இடைப்பட்டிருக்க வேண்டும். தரம் II க்கு வயதெல்லை 21 க்கும் 30 க்கும் இடைப்பட்டிருக்க வேண்டும். பொதுச் சேவையில் உள்ளவர்களுக்கு உயர் வயதெல்லை பிரயோகமாகாது.

4. **கல்வித் தகைமையும் மற்றும் தகைமைகளும்**

(i) I ம் தர இயந்திரவியலாளர்.

(அ) எட்டாம் வகுப்பில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) இரண்டாம் தர இயந்திரவியலாளராகக் குறைந்தது 10 வருட அனுபவமேனும் பெற்றிருக்க வேண்டும்.

(இ) டயல்மானி ஆகியவற்றைச் செய்யும்போது உபயோகப் படுத்தக்கூடியதாக இருக்க வேண்டும்.

(ஈ) தேவையானபோது தன் ஆயுதங்களைத் தீட்டக்கூடியதாகவும், தயாரிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

(உ) வெட்டுக கோணங்களையும், சரிவு கோணங்களையும் தக்க முறையில் உணரக் கூடியதாக விளங்க வேண்டும்.

(ii) II ம் தர இயந்திரவியலாளர்.

(அ) எட்டாம் வகுப்பில் சித்தி பெற்றிருக்க வேண்டும். மதிக்கத்தக்க நிறுவனத்தில் இயந்திரவியலாளராகக் குறைந்தது 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) மைக்ரோ மீட்டரை இயக்கக்கூடியதாகவும், வாசிக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

(இ) தொழிலுக்குரிய ஆயுதங்களதும், அதனைச் சார்ந்த உறுப்புக்களதும் பெயர்களையும், சாதாரண பேணலையும் அவற்றைத் திறமையாக உபயோகிப்பதையும் பற்றித் தெரிந்திருக்க வேண்டும்.

(ஈ) தொழில் தொடர்பான எல்லா வரைதல்களையும் வாசிக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

(உ) வேலை செய்யப்போகும் இயந்திரத்தை நல்ல முறையில் இயக்கக் கூடியதாக இருக்க வேண்டும்.

5. **வேலைக்கமர்த்தல் நிபந்தனைகள்.**—பதவி நிரந்தரமானது. இளைப்பாறும் சம்பளம் அற்றது. மாதாந்த சம்பளம் பெறும் பொழுது அரசாங்கச் சகாய நிதிக்கு பணம் செலுத்த வேண்டும்.

6. **விண்ணப்பங்கள்.**—விண்ணப்பதாரி கீழ் உள்ள மாதிரிப் படிவத்தை ஒத்த படிவம் அமைத்து, பதிவுத் தபாலில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறித்து "பிரதிப் பணிப்பாளர் (பொறியியல் நிறுவனம்), பொறியியல் பகுதி, கமத்தொழில் திணைக்களம், பேராதனை" என்ற விலாசத்திற்கு 1973 ம் ஆண்டு மாசி மாதம் 28 ம் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்ப வேண்டும். சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்பட வேண்டும். மாதிரிப் படிவத்துக்கு அமையாததும், வாசிக்க முடியாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றிய அறிவிப்புக் கடிதங்கள் அனுப்பப்படமாட்டாது. திணைக்கள ஊழியர்களின் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவர் ஊடாக அனுப்பப்படல் வேண்டும்.

7. இவ்வர்த்தமானி, பகுதி I பிரிவு II ல் பிரசுரிக்கப்பட்ட பொதுச் சேவைப் பதவிகளின் நியமனத்துக்கான பொது நிபந்தனைகளுக்கு விண்ணப்பதாரிகளின் அவதானம் வேண்டப்படுகின்றது.

பீ. ரி. ஜினேந்திரதாச,
கமத்தொழிற் பணிப்பாளர்.

கமத்தொழில் திணைக்களம்,
பேராதனை.
9 ஜனவரி 1973.

#### மாதிரி விண்ணப்பப் படிவம்

இயந்திரவியலாளர் தொழிலாளர் தரம் I ம், II ம்
கமத்தொழில் திணைக்களம்

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :————.
2. விலாசம் :————.
3. தேசியம் (பிறப்பால் அல்லது பதிவால் இலங்கையரா) : ————.
4. 28.2.73 ல் வயது :————.
5. பிறப்பிடமும் திகதியும் :—
 (அ) விண்ணப்பதாரி :————.
 (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
6. பெற்றுள்ள கல்வித் தகைமையும் மற்றும் தகைமைகளும் : ————.
7. பாடசாலை விட்டதிலிருந்து மேற்கொண்ட தொழில். தொழில் இருக்குமானால், இப்பொழுது வகிக்கும் பதவியும் சம்பள மட்டமும் :————.
8. விண்ணப்பதாரியின் நடத்தையை உறுதிப்படுத்தும் இரு ஆட்களின் பெயரும் பதவிப் பெயரும் :————.
9. விண்ணப்பிக்கும் பதவியும் தரமும் :————.

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை, சரியானவை என நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை, தவறானவை எனத் தெரிவுக்கு முன் காணப்படின் எனது தகைமை அழிக்கப்படவும், தெரிவுக்கு பின் காணப்படின் நஷ்ட ஈடின்றி என்னை வேலை நீக்கம் செய்யப்படவும் நேரிடும் என நான் அறிந்துள்ளேன்.

————,
திகதி :————. விண்ணப்பதாரியின் கையொப்பம்.

1-955/1—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

### கமத்தொழில் திணைக்களம்

இயந்திரவியலாளர் தொழிலாளர் தரம் I ம், III ம்

கமத்தொழிற்றிணைக்களத்தில், தொழிலாளர் தரத்தில் உள்ள இயந்திரவியலாளர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் தகைமையுடையவர்கள் விண்ணப்பிக்கலாம்.

2. **சம்பளவிகிதம்.**—I ம் தர மோட்டார் இயந்திரவியலாளர்—வருடாந்தம் ரூபா 3,240—12 × 60—ரூபா 3,960 (திரட்டியது) என்று அமையும்.

III ம் தர மோட்டார் இயந்திரவியலாளர்—
ரூபா 2,208—9 × 54 ரூபா 2,694 (திரட்டியது) என்று அமையும்.

3. **வயதெல்லை.**—முதலாவது தரத்திற்கு வயதெல்லை 25 க்கும் 35 க்கும் இடைப்பட்டிருக்க வேண்டும். III ம் தரத்திற்கு 20 க்கும் 30 க்கும் இடைப்பட்ட வயதாக இருக்க வேண்டும். பொதுச் சேவையில் உள்ளவர்கட்கு உயர் வயதெல்லை பிரயோகமாகாது.

4. **கல்வித் தகைமையும் மற்றும் தகைமைகளும்**

(i) I ம் தர இயந்திரவியலாளர்.

(அ) எட்டாம் வகுப்பில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) கணிக்கத்தக்க நிறுவனத்தில் இயந்திரவியலாளராகக் குறைந்தது 10 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) சக்கரங்கள் உட்பட செசிஸ், எஞ்சின் ஆகியவைகளின் பல்வேறு உறுப்புக்களை இயக்குகையில் ஒன்றுடன் ஒன்று முட்டுப்படாது இருப்பதற்கான இட அமைப்பு பற்றிய அறிவு இருக்க வேண்டும்.

(ஈ) பெயரிங்குகளைப் பொருத்தல், செவ்வை பார்த்தல், சுழல் திருகாணிச் சாவியை உபயோகித்தல்பற்றி அறிந்திருக்க வேண்டும்.

(உ) வாகனத்தின் மின்சார அமைப்பு முறை பற்றிய பொதுவான அறிவு பெற்றிருக்க வேண்டும்.

(ஊ) பெற்றோலியம் டீசலிலும் இயங்கும் இயந்திரங்களில் ஏற்படும் பிழைகளை, கெதியிலும், சரியாகவும் கண்டறியக் கூடியதும், திருத்தக் கூடியதுமானதாக இருக்க வேண்டும்.

(எ) தேவை ஏற்படுமிடத்து, டீசல் எரிபொருள் அமைப்பை வெளிப்படுத்தக் கூடியதாக இருக்க வேண்டும்.

(ஏ) தேவை ஏற்படுமிடத்து, அணுவாக்கியையும் பம்பையும் சுத்தம் செய்ய, பரீட்சை செய்ய, இயக்கக் கூடியதாக விளங்க வேண்டும்.

(ii) III ம் தர இயந்திரவியலாளர்.

(அ) ஆறும் வகுப்பில் சித்தி பெற்றிருக்க வேண்டும்.

(ஆ) 1/6" அளவு மட்டம் வரை வாசிக்கக் கூடியதாகவும், வாசித்ததைப் பதிவில் வைத்திருக்கக் கூடியதாகவும் இருக்க வேண்டும்.

(இ) மோட்டார் செப்பனிடுதலில் குறைந்தது 3 வருட கால அனுபவம் இருக்க வேண்டும்.

(ஈ) தொழில் சம்பந்தப்பட்ட ஆயுதங்களின் பெயர், உபயோகம், திருத்தம் ஆகியவற்றில் கைதேர்ந்தவராக இருக்க வேண்டும்.

(உ) சிறு திருத்தங்களைச் செய்யக் கூடியதாக இருக்க வேண்டும்.

5. **வேலைக்கமர்த்தல் நிபந்தனைகள்.**—பதவி நிரந்தரமானது மாதாந்தச் சம்பளம் பெறும்பொழுது அரசாங்க சேவை சகாய நிதிக்கு பணம் செலுத்தல் வேண்டும்.

6. **விண்ணப்பங்கள்.**— விண்ணப்பதாரி கீழுள்ள மாதிரிப் படிவத்தையொத்த படிவம் அமைத்து, பதிவுத் தபாலில், விண்ணப்பிக்கும் பதவியைக் குறித்து, "பிரதிப் பணிப்பாளர், (பொறியியல்/நிறுவனம்) பொறியியல் பகுதி, கமத்தொழில் திணைக்களம், பேராதனை" என்ற விலாசத்துக்கு 1973 ம் ஆண்டு மாசி மாதம் 28 ம் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்ப வேண்டும். சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும். மாதிரிப் படிவத்துக்கு அமையாததும், வாசிக்க முடியாததுமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்கள் கிடைத்தமை பற்றிய அறிவிப்புக் கடிதங்கள் அனுப்பப்பட மாட்டாது.

திணைக்கள ஊழியர்களின் விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட திணைக்களத் தலைவரினூடாக அனுப்பப்படல் வேண்டும்.

7. இவ்வர்த்தமானி பகுதி I, பிரிவு II ல் பிரசுரிக்கப்பட்ட பொதுச்சேவைப் பதவிகளின் நியமனத்துக்கான பொது நிபந்தனைகளுக்கு விண்ணப்பதாரிகளின் அவதானம் வேண்டப்படுகின்றது.

பி. ரி. ஜினேந்திரதாச,
கமத்தொழில் பணிப்பாளர்.

கமத்தொழில் திணைக்களம்,
பேராதனை,
1973 ஜனவரி 9.

**மாதிரி விண்ணப்பப் படிவம்**

**இயந்திர (உதவியாளர்) தொழிலாளர் தரம் I ம், III ம்**

**கமத்தொழில் திணைக்களம்**

1. விண்ணப்பதாரியின் முழுப்பெயர் :————
2. விலாசம்.————
3. தேசியம் (பிறப்பால் அல்லது பதிவால் இலங்கையரா) :——
4. 28.2.1973 ல் வயது :————
5. பிறப்பிடமும் திகதியும் :—
   (அ) விண்ணப்பதாரி :————
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————
6. பெற்றுள்ள கல்வித் தகைமையும் மற்றும் தகைமைகளும் :—
7. பாடசாலை விட்டதிலிருந்து மேற்கொண்ட தொழில். தொழில் இருக்குமானால், இப்பொழுது வகிக்கும் பதவியும் சம்பள மட்டமும் :————
8. விண்ணப்பதாரியின் நடத்தையை உறுதிப்படுத்தும் இரு ஆட்களின் பெயரும், பதவிப் பெயரும் :————
9. விண்ணப்பிக்கும் பதவியும் தரமும் :————

இவ்விண்ணப்பத்தில் என்னால் தரப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை, சரியானவை என நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதில் தரப்பட்டுள்ள விபரங்கள் பொய்யானவை, தவறானவை எனத் தெரிவுக்கு முன் காணப்படின் எனது தகைமை அழிக்கப்படவும், தெரிவுக்குப் பின் காணப்படின் நஷ்ட ஈடின்றி என்னை வேலை நீக்கம் செய்யப்படவும் நேரிடும் என நான் அறிந்துள்ளேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி.————

1-955/2—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

**மாத்தறை மாவட்டதில் கந்தபொட பத்துவில் மீயல்லேப் பிரிவிற்கு முஸ்லிம் விவாகப் பதிவுகாரர் பதவி**

மீயல்லே பிரிவில் நிரந்தரமாகக் குடியிருப்பவர்கள் அப்பிரிவில் சில காலமாக வசிப்பவர்கள் அல்லது பொதுமக்களால் அங்கீகரிக்கப்படக்கூடிய விவாகமான ஆண் முஸ்லிம்கள் மேற்படி பதவிக்கு விண்ணப்பிக்கலாம்.

2. இப்பதவிக்கு விண்ணப்பிப்பவர்களுக்குரிய கல்வித் தராதரங்களும் ஏனைய பிற தராதரங்களும் நிபந்தனைகளும் இவ்வலுவலகத்திலும் காரியாதிகாரி அலுவலகங்களிலும் கிராம சேவையாளர் அலுவலகங்களிலும் உள்ளூராட்சி அலுவலகங்களிலும் கிராம நீதி மன்றங்களிலும் தபால் அலுவலகங்களிலும் கூட்டுறவுச்சங்க அலுவலகங்களிலும் பார்வைக்கு வைத்திருக்கின்ற அறிவித்தல்களில் அடங்கியுள்ளன.

3. எல்லா விண்ணப்பங்களும் இவ்வலுவலகங்களில் பெற்றுக் கொள்ளக்கூடிய விண்ணப்பப்பத்திரங்களில் நிரப்புவதோடு 1973 ம் ஆண்டு மாசி மாதம் 15 ந் திகதி அல்லது அதற்கு முன்னர் எனக்குக் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபால்மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

என். வீ. கே. கே. வேரகொட,
மாவட்டப் பதிவாளர்.

மாவட்டப் பதிவாளர் அலுவலகம்,
மாத்தறை,
1973 ம் ஆண்டு தை மாதம் 10 ந் திகதி.

1-903—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

**மகாவலி அபிவிருத்தி சபை**

இலங்கைப் பிரசைகளிடமிருந்து சபையின் சேவைக்காக கீழ்க் காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் (இந்தக் காரியாலயத்தில் பெறப்பட்ட விண்ணப்பப் படிவங்களில்) பதிவுத் தபால்மூலம் 1973 ஆம் ஆண்டு மாசி மாதம் 15 ஆந் திகதியோ அல்லது அதற்கு முன்னரோ "பொது முகாமையாளர், மகாவலி அபிவிருத்திச் சபை இல. 11, யாவத்தை வீதி, கொழும்பு 5" என்னும் முகவரிக்கு அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பப்படிவங்கள் பெற விரும்புவோர் தங்கள் முகவரி இடப்பட்ட, முத்திரை ஒட்டப்பட்ட தபாலுறையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**படம் வரைவுக் கந்தோர் உதவியாளர்**

வயது : 40 வயதிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
சம்பள விகிதம் : மாதமொன்றுக்கு ரூபா 800—9×40—ரூபா 1,160.

**தகைமைகளும் அனுபவமும்**

(அ) சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தூய கணிதத் துடன் சித்தியும் ;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிலையத்தில் படம் வரை அறிஞர் நெறியில் முழு நேர ஒரு வருட பயிற்சியில் அல்லது கட்டிட அமைத்தல் நெறியில் 3 வருட பகுதிநேர பயிற்சியில் அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியும் ;

(இ) அரசாங்க திணைக்களம் அல்லது கூட்டுத்தாபனத்தால் நடாத்தப்பட்ட படம் வரை அறிஞர் தரம் II க்கு ஆன அங்கீகரிக்கப்பட்ட பரீட்சையில் சித்தியும், பொறியியல் திணைக்களத்தில் அல்லது பொறியியல் கூட்டுத்தாபனத்தில் படம் வரை அறிஞராக 20 வருட அனுபவமும் அதில் குறைந்தது 5 வருடம் படம் வரை அறிஞர் தரம் I இல் சேவைபுரிந்திருத்தல் வேண்டும்.

**படம் வரை அறிஞர்—தரம் II**

வயது : 21 வயதிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.
சம்பள விகிதம் : மாதமொன்றுக்கு ரூபா 425—11×26—ரூபா 645.

**தகைமைகளும் அனுபவமும்**

(அ) சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தூய கணிதத்துடன் சித்தியும் ;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிலையத்தில் படம் வரை அறிஞர் நெறியில் முழுநேர ஒரு வருட பயிற்சியில் அல்லது கட்டிட அமைத்தல் நெறியில் 3 வருட பகுதிநேர பயிற்சியில் அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியும் ;

(இ) 2 வருட அனுபவத்தின்பின் அரசாங்க திணைக்களம் அல்லது கூட்டுத்தாபனத்தால் நடாத்தப்பட்ட படம் வரை அறிஞர் தரம் II க்கு ஆன அங்கீகரிக்கப்பட்ட பரீட்சையில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

**படம் வரை தொழில் பயில்வோன்**

வயது : 20 வயதிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம் : மாதமொன்றுக்கு ரூபா 300—2×10—ரூபா 320

**தகைமைகளும் அனுபவமும் :**

(அ) சிரேஷ்ட பாடசாலை தராதரப் பத்திரப் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் தூய கணிதத்துடன் சித்தியும் ;

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட தொழில்நுட்ப நிலையத்தில் படம் வரை அறிஞர் நெறியில் முழுநேர ஒரு வருட பயிற்சியில் அல்லது கட்டிட அமைத்தல் நெறியில் 3 வருட பகுதி நேர பயிற்சியில் அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தியும் பெற்றிருத்தல் வேண்டும்.

**விவசாய உத்தியோகத்தர்**

வயது : 21 வயதிற்கு குறையாமல் இருத்தல் வேண்டும்.

சம்பள விகிதம் : மாதமொன்றுக்கு ரூபா 800—14×40—ரூபா 1,360.

**தகைமைகளும் அனுபவமும் :**

அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தில் விவசாய பட்டதாரிப் பட்டம் பெற்றவராகவோ அல்லது விவசாயக் கல்லூரியில் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றவராகவும் 10 வருட அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு : விவசாயப் பட்டதாரிப் பரீட்சைக்கு சமூகமளித்து பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்ப்பவர்களும் அனுப்பும் விண்ணப்பங்கள் தற்காலிகமாக ஏற்றுக்கொள்ளப்படும். பரீட்சைப் பெறுபேறுகள் வெளியிடப்பட்டவுடன் எனக்கு அறிவிக்கப்படல் வேண்டும்.

சபை, கூட்டுத்தாபனம் அல்லது அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் அந்த அந்த சபை/கூட்டுத்தாபனம் அல்லது திணைக்களத் தலைவர்களுக்கூடாக அனுப்பப்படல் வேண்டும். தெரிவு செய்யப்பட்டால் தாங்கள் வேலை செய்யும் அரசாங்க சேவை, சபை/கூட்டுத்தாபனங்களில் இருந்து தங்களை முற்றாக விடுதலை செய்துகொள்ளல் வேண்டும்.

ஆர். எஸ். குக்,
பொது முகாமையாளர்,
மகாவலி அபிவிருத்திச் சபை.

இல. 11, யாவத்தை வீதி,
கொழும்பு 5.

1-987—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

**அரசகரும மொழித் திணைக்களத்தில் தொழிலாளர் தரத்தின் 1-ம் வகுப்பு தட்டச்சுப்பொறிவலர் பதவி**

அரசகரும மொழித் திணைக்களத்தில் தொழிலாளர் தரத்தின் 1-ம் வகுப்புத் தட்டச்சுப் பொறிவலர் பதவிக்கான கீழ்க்காணும் தகைமைகளையுடைய அபேட்சகரிடமிருந்து விண்ணப்பப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. பின்வரும் மாதிரிப் படிவத்தின் பிரகாரம் தயாரிக்கப்படும் விண்ணப்பப் பத்திரங்களை 1973 பெப்புருவரி 17 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கொழும்பு-7, 22 ம் இலக்கம், ரீட்வழியில் அமைந்துள்ள அரசகரும மொழித் திணைக்களத்தின் ஆணையாளருக்குக் கிடைக்குமாறு அனுப்புதல் வேண்டும்.

2. வேதன அளவுத்திட்டம்.—(அ) கொழும்பு நகர எல்லைக்குள்ளும் கொழும்பு நகர எல்லையிலிருந்து 5 மைல் விட்டத்துள்ளும் அடங்கும் பிரதேசத்தில் அல்லது எந்திரவியல் நிறுவனமும், தொழிற்சாலைச் சார்புடைய நிறுவனமும் திறைசேரியினால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு :—

முதல் ஆறு மாதங்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 10.70 வீதமும் அதன் பின்னர் வருடமொன்றுக்கு ரூபா 3,240—60×12—3,960 ரூபாவையுடைய திரட்டு வேதனமும் (முதல் ஆறு மாதங்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 3.86 வீதமும் அதன் பின்னர் வருடமொன்றுக்கு ரூபா 1,170—42 × 12—1,674 உத்தேச வேதனமும், 69.10.01 க்கு முன்)

(ஆ) வெளியூர்களில் எந்திரவியல் நிறுவனங்களும் தொழிற்சாலைச் சார்புடைய நிறுவனங்களுமென திறைசேரியினால் ஏற்றுக்கொள்ளப்படாதுள்ள நிறுவனங்களில் பணிபுரிபவர்களுக்கு :—

முதல் ஆறு மாதங்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 9.70 வீதமும் அதன் பின்னர் வருடமொன்றுக்கு ரூபா 3,060—60 × 9—3,600 ஐ உடைய திரட்டு வேதனமும். (முதல் ஆறு மாதங்களுக்கு நாளொன்றுக்கு ரூபா 3.30 வீதமும் அதன் பின்னர் வருடமொன்றுக்கு ரூபா 1,044—41×8—1,380 உத்தேச வேதனமும் 69-10-01 க்கு முன்)

3. கல்வித் தகைமைகளும் வேறு தகைமைகளும்.—(அ) சகல விண்ணப்பதாரரும், கீழ்க்காணும் விடயங்களை உறுதிப்படுத்தும் முகமாக திருப்திகரமான சான்றுகளைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

(i) விண்ணப்பப் பத்திரம் ஏற்றுக்கொள்ளும் முடிவு திகதியன்று குறைந்தபட்சம் 25 வயதுக்குக் கீழ்ப்படாதவராயும், 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையிலுள்ளவர்கள் தொடர்பில் உச்ச வயதெல்லை வலுவுடையதன்று.

(ii) சகல வகைகளையுஞ் சேர்ந்த தட்டச்சுப் பொறிகள் சம்பந்தமாகச் சிறந்த அறிவு இருத்தல் வேண்டும்.

(iii) தேவையேற்படும் சந்தர்ப்பங்களில் சிறு உறுப்புக்களைச் செய்து பொருத்தக்கூடிய திறமை இருத்தல் வேண்டும்.

(ஆ) மேற்படி (அ) பந்தியில் குறிப்பிடப்பட்ட தகைமைகளுடன் கீழ்க்காணும் தகைமைகளில் ஒன்றாவது இருத்தல் வேண்டும். இந்தத் தகைமைகள் முந்துரிமைப் பிரகாரம் கிரமமாகக் காட்டப்பட்டுள்ளன.

(i) திணைக்களத்துச் சேவையாளர்களுக்கு.—(அ) அரசாங்கத் திணைக்களமொன்றில் II ம் வகுப்பில் சம்பந்தப்பட்ட பதவியில் 8 வருடங்கள் சேவை புரிந்திருத்தல் ; அல்லது

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் (அ) I ம் வகுப்பு நுண்வினைக் கம்மியராகக் குறைந்தது 6 வருட அல்லது (ஆ) II ம் வகுப்பு நுண்வினைகம்மியராக 12 வருடச் சேவையை உடையவரும் II ம் வகுப்பில் குறைந்தது, 3 வருட சேவையை உடையவருமான சேவையாளர்கள். (சான்று மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்) ; அல்லது

(இ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் முதலாம் வகுப்பில் சம்பந்தப்பட்ட நுண்வினைக்கம்மியராகவும் திணைக்களத்து II ம் வகுப்பில் சம்பந்தப்பட்ட சேவையாளராகவும் மொத்தம் 9 வருடங்களுக்குக் குறையாத சேவைக் காலத்தைக் கொண்டிருத்தல் (மேற்படி (அ), (ஆ) பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட வகையைச் சேர்ந்த சேவையாளர்கள் இல்லாத பட்சத்தில் மட்டுமே அமைச்சின் அனுமதியுடன் இந்த வகையைச் சேர்ந்த சேவையாளர்கள் கவனத்துக்கெடுத்துக்கொள்ளப்படுவர்.) அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் முன்னர் ஆற்றிய சேவை குறித்துச் சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.

(ii) வெளி விண்ணப்பதாரர்.—(அ) அங்கீகரிக்கப்பட்ட நிறுவன மொன்றில் I ம் வகுப்பில் சம்பந்தப்பட்ட நுண்வினைக்கம்மியராக 6 வருடங்களுக்குக் குறையாத சேவையுடன் சம்பந்தப்பட்ட நுண்வினைக்கம்மியராக 10 வருடத்துக்குக் குறையாத சேவையைக் கொண்டிருத்தல். (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)

(ஆ) சிறந்த குணநலமுடையவராயிருத்தல் (பொறுப்பு வாய்ந்த நபர்கள் கையொப்பமிட்ட குணநலச் சான்றிதழ் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.)

குறிப்பு.—ஐக்கிய ராச்சியத்துப் பாசறைகளில் நுண்வினைக்கம்மியராக ஆற்றிய சேவை அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலாற்றிய சேவையாகக் கொள்ளப்படும்.

4. சேவையில் அமர்த்துவது பற்றிய நியதிகளும் நிபந்தனைகளும்.—பதவி நிரந்தரமானது. மாதாந்த வேதன அளவுத் திட்டத்தில் அமர்த்தப்பட்டதன் பின் அரசாங்க சேவை ஏற்பாட்டு நிதியத்துக்கு உதவு தொகை செலுத்துதல் வேண்டும். தற்போது அரசாங்க சேவையில் நிரந்தரமானதும் ஓய்வூதியமுடையதுமான பதவியிலிருப்போர் தெரிவு செய்யப்பட்டால் அவர்களுக்கு அந்த உரிமைகள் மாற்றமின்றி நிலைக்கும்.

(i) நியமிக்கப்படுபவர் அரசகரும மொழிக் கொள்கையின் தேவைகளின் பொருட்டாக அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தவராயிருந்தால் பரீட்சார்த் காலம் 3 வருடமாகும்.

(ii) அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிப்பவர் தெரிவு செய்யப்பட்டால் குறிப்பிட்ட கால எல்லைவரை அவர் பதில் சேவையாளராகவே நியமிக்கப்படுவர்.

(iii) நியமிக்கப்படுபவர் தீவின் எந்தப் பகுதியிலும் சேவைபுரியத் தயாராயிருத்தல் வேண்டும்.

(iv) நேர்முகப் பரீட்சை மூலமும் செய்முறைப் பரீட்சை மூலமும் சேவைக்கு ஆட்சேர்ப்பு நடைபெறும்.

5. சேவை நிபந்தனைகள்.—765 ம் இலக்கத்தையுடைய 69.06.09 ம் திகதியைச் சேர்ந்த திறைசேரி சுற்றறிக்கையின் 2 ம் பந்தியின் (அ), (ஆ) பந்திகள் இங்கு பொருந்தும்.

6. விண்ணப்பதாரர் தத்தமது விண்ணப்பத்திரங்களை தங்கள் திணைக்கள/நிறுவன தலைவர்கள் மூலம் சமர்ப்பித்தல் வேண்டும். எவ்வாறாயினும் தனது விண்ணப்பப் பத்திரத்தின் பிரதியொன்றை நேரடியாக அரசகரும மொழி ஆணையாளருக்கு அனுப்புதல் வேண்டும். குறித்த திகதிக்குப் பிந்திக் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். இருந்தும் உரிய நேரத்தில் திணைக்கள/நிறுவன தலைவருக்கு அனுப்புவதில் ஏற்பட்ட தாமதம் பற்றி நியாயமான காரணம் காட்டினால் மட்டுமே அங்ஙனம் தாமதித்துக் கிடைக்கும் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

7. இந்த வர்த்தமானியின் I ம் பாகத்தின் II ம் தொகுதியின் தொடக்கத்திலுள்ள அரசாங்க சேவைப் பதவிகளுக்கான நியமனங்கள் பற்றிய பொது நிபந்தனைகளையும் பார்ப்பது நலம்.

8. விண்ணப்பப் பத்திரங்கள் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாள் கழிந்து ஒரு வாரத்தினுள் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தது பற்றிக் கடிதமெதுவும் வரப்பெறாத பட்சத்தில் உடனடியாக அது சம்பந்தமாக அரசகரும மொழி அலுவல்கள் ஆணையாளருக்கு அறிவித்தல் வேண்டும். விண்ணப்பதாரர் எவராவது இந்தக் கோரிக்கையைப் புறக்கணிப்பாரானால் தனது விண்ணப்பப் பத்திரத்தைக் கவனிக்குமாறு கோருதற்கான உரிமையை இழந்தவராவர்.

பீட்டர் பீ. அபேசேகர,
அரசகரும மொழி அலுவல்கள் ஆணையாளர்.

1973.01.17.
22, ரீட் வழி,
கொழும்பு 7.

### அரசகரும மொழித் திணைக்களத்தில் தொழிலாளர் தரத்தின் I ம் வகுப்புத் தட்டச்சுப் பொறிவலர் பதவிக்கான விண்ணப்பப் படிவம்

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்தில்) :————.

2. நிரந்தர முகவரி :————.

3. 1973.02.17 ம் திகதியன்று வயது :—
வருடம் : ........... மாதம் : ........... நாள் : ...........
பிறந்த திகதி :————.

4. பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரர் :————.
(ஆ) விண்ணப்பதாரரின் தந்தை :————.
(இ) விண்ணப்பதாரரின் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரரின் முப்பாட்டன் :————.

5. இலங்கையானது வம்சாவழி மூலமா ? பதிவு மூலமா ? :————.

6. கல்வித் தகைமைகள் :—
(i) பொது :————.
(ii) உயர் தொழிலும்/அல்லது தொழினுட்பச் சான்றிதழ்கள் பற்றிய விவரம் :————.
(iii) சிங்களமொழியில்/தமிழ் மொழியில் தேர்ச்சியடைந்துள்ள அதி உயர்ந்த பரீட்சை :————.

7. அறிவித்தலின் 3 ஆம் பந்தியின் கீழ் சேவை விவரங்கள் :—————.
(பணிபுரிந்த நிறுவனம், சேவைக்காலம், வகித்த பதவி என்பவற்றைக் குறிப்பிடுதல் வேண்டும்)

8. விவாகமானவரா ? விவாகமாகாதவரா ? துணையிழந்தவரா ? :————.

9. ஏதேனும் குற்றவியல் தவறுக்காக நீதிமன்றத்தினால் குற்றவாளியாகத் தீர்ப்பு வழங்கப்பட்டவரா ? அவ்வாறானால் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தின் தன்மை :————.

10. பணத்தொல்லை அற்றவரா ? அவ்வாறில்லாவிடின் உமது கடன் பொறுப்புக்களின் பெறுமதி எவ்வளவு ? :————.

11. உமக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளனவா ? அவ்வாறானால் அது சம்பந்தமான விவரங்கள் :————.

12. சேவையிலிருந்து விலகிய போர்வீரனாயிருந்தால் (அ) சேனைப் பிரிவு (ஆ) பதவி (இ) சேவையில் சேர்ந்த திகதியும் அதிலிருந்து விலகிய திகதியும் பற்றிய விவரங்கள் :————.

13. பாடசாலையிலிருந்து விலகிய தினத்திலிருந்து செய்த தொழில்கள் :—
(i) வகித்த பதவி :————.
(ii) சேவைக் காலம் :————
(iii) விலகியதற்கான காரணம் :————.

14. அரசாங்கத்தின் கீழ் அல்லது உள்ளூராட்சி நிறுவனமொன்றின் கீழ் ஏலவே நிரந்தர அல்லது தற்காலிக தொழிலொன்றில் அமர்ந்திருந்தவிடத்து அந்தச் சேவை ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் நிறுத்தப்பட்டிருந்தால்.—
(அ) அந்தத் தொழில் பற்றிய விவரம் :————.
(ஆ) பணிபுரிந்த காலம் :————.
(இ) சேவை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் :—

15. தற்போது செய்து கொண்டிருக்கும் தொழில்—
(i) நிறுவனம் :————.
(ii) பதவியும் தரமும் :————.
(iii) நியமனத் திகதி :————.
(iv) ஓய்வூதியமுடையதா ? தற்காலிகமானதா ? அமயமா ? :————.
(v) படிகள் நீங்கலாக தற்போது கிடைக்கும் வேதனமும் வேதன அளவுத் திட்டமும் :————.

16. வேறு விபரங்கள் :————.

இந்த விண்ணப்பப் பத்திரத்தில் நான் குறிப்பிட்டுள்ள விவரங்கள் யாவும் உண்மையானவையெனவும், பிழையற்றவையெனவும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். இங்கு குறிந்துள்ள யாதேனும் விபரம் பொய்யானதென்றோ, பிழையானதென்றோ தெரிவு செய்தற்கு முன் கண்டு பிடிக்கப்பட்டால் நான் தகுதியிழந்தவராவேன் என்பதையும் நியாயத்தின் பின் தவறு வெளிப்பட்டால் நட்ட ஈடு எதுவுமின்றி என்னைச் சேவையிலிருந்து நீக்குதற்கு முடியுமென்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————.

### திணைக்கள/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்

எனது எண் :
உமது எண் : ஆ/5/

அரசகரும மொழி அலுவல் ஆணையாளர்,

இவ்விண்ணப்பம், விண்ணப்பங்கள் ஏற்கப்படும் இறுதித் தேதியின் முன் */பின் இவ்வலுவலகத்திற் பெற்றுக் கொள்ளப்பட்டது ........................................ இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை */பின்வரும் திருத்தங்கள் உட்படச் சரியானவை என இத்தால் அத்தாட்சிப்படுத்தி அனுப்பி வைக்கின்றேன்.

........................................................................
........................................................................
........................................................................
........................................................................

திணைக்கள/நிலையத் தலைவரின் கையொப்பம் :————.

பதவிப் பெயர் :————.

தேதி :————.

*(பொருத்தமற்றதைக் கீறிவிடுக)

1-957—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

## அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்

### காசாளர்/எழுதுவினைஞர் III ம் தரம்

இக்கூட்டுத்தாபனத்தில் மேற்கூறிய பதவிக்கான விண்ணப்பங்கள் தேவையெனக் கருதப்படும் தகுதிகள் கொண்ட இலங்கைப் பிரசைகளிடமிருந்து கீழ்க் கையொப்பமிடுபவரால் ஏற்றுக் கொள்ளப்படும்.

1. சம்பள விகிதம்.—ரூபா 380/—8×15—500/- மாதமொன்றிற்கு எல்லாமுட்பட.

2. வயதெல்லை.—20—40 வரை.

3. **கல்வித் தகைமையும் மற்றும் தேவைகளும்.**—(அ) க. பொ. த. ப. (முன்னேற்ற நிலை) பரீட்சையில் இரு தடவைகட்கு அதிகப்படாத தடவைகளில் 4 பாடங்களில் (இவற்றில் ஒன்று கணக்கிடாக இருத்தல் வேண்டும்) சித்தியடைந்தவராகவும்,

(ஆ) அரசாங்க சேவையில் அல்லது அங்கீகரிக்கப்பட்ட தனிப்பட்ட சேவைகளிலொன்றில் காசாளராக 3 வருடங்கட்குக் குறையாத அனுபவம் பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

(இ) தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் பிணைப்பணமாக ரூபா 1,000/- கொடுத்தல் வேண்டும். அத்துடன் அவர் நம்பிக்கை உத்தரவாதமாக ரூபா 10,000/- க்கு சமர்ப்பணமளிக்கவும் வேண்டும்.

இக்கூட்டுத்தாபனக் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளக் கூடிய விண்ணப்பப் படிவங்களில் நிரப்பப்பட்ட விண்ணப்பங்கள் 10.02.1973 அன்று அல்லது அதற்கு முன்பு பதிவு செய்யப்பட்ட கடிதவுறைகளில் தலைவர், அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம், 2 பி, டி பொன்சேகா வீதி, கொழும்பு 5 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பப் படிவங்களை நேர் முகமாகப் பெற விரும்பின் இக்காரியாலயத்தின் சாதாரண வேலை நேரங்களிலும் மற்றவர்கள் தமது விலாசமிடப்பட்டு முத்திரை ஒட்டப்பட்ட கடிதவுறைகளை (அளவு 9"×4") எனக் கனுப்பியும் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது.

தலைவர்,
அரசாங்க அச்சகக் கூட்டுத்தாபனம்.

2 பி, டி பொன்சேகா வீதி,
கொழும்பு 5,
01.01.1973.

1-997—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

## காணி சீர்திருத்த ஆணைக்குழு

### புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவி

காணி சீர்திருத்த ஆணைக்குழுவில் குழுச் சேவை தரம் III ல் தற்காலிக புள்ளிவிபர உத்தியோகத்தர் பதவிக்கு இலங்கைப் பிரசைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. **சம்பள விகிதம்:** ரூ. 1,250/- 10×50/- ரூ. 1,750/- (தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தகைமைக்கும், அநுபவத்திற்கும் அமைய சம்பள விகிதத்தில் தகுந்த இடத்தில் வைக்கப்படுவார்)

2. **வயது:** 15.02.73 ல் 20 வயதிற்குக் குறையாமலும் அல்லது 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

**குறிப்பு:** அரசசேவை, சபைகள் அல்லது கூட்டுத்தாபனங்களில் உள்ள உத்தியோகத்தர்களுக்கு வயதுத் தகைமை தளர்த்தப்படும்.

3. தகைமைகள்: அ. புள்ளிவிபரம், அட்சரகேத்திர கணிதம் அல்லது பொருளாதாரம் ஒரு பாடமாக அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக் கழகத்தின் முதலாம் வகுப்பு அல்லது இரண்டாம் வகுப்பு பட்டமாகவோ அல்லது அவற்றில் ஏதாவது ஒரு பாடம் கொண்ட பட்டப்பின் பட்டமாக விருத்தல் வேண்டும். விவசாயத் துறையில் புள்ளிவிபர வேலையில் அநுபவம் உள்ளவர்களுக்கு முதலிடம் கொடுக்கப்படும். வகுப்புகள் அளிக்கப்படாத பல்கலைக் கழக பட்டதாரிகள் மற்றைய எல்லாத் தகைமைகளும் உடையவர்களாய் இருந்தால் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவர்.

ஆ. புள்ளிவிபரம், அட்சரகேத்திர கணிதம் அல்லது பொருளாதாரம் ஒரு பாடமாக உள்ள பட்டதாரி அபேட்சகர்களும் அரச திணைக்களம், சபை, அல்லது கூட்டுத்தாபனத்தில் விவசாயத் துறையில் புள்ளிவிபர வேலையில் குறைந்தது 5 வருட அனுபவமுடையவராயிருப்பின் விண்ணப்பிக்கத் தகுதியுடையவராவர்.

4. அரச சேவை, சபைகள், அல்லது கூட்டுத்தாபனங்களில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை அவ்வத் திணைக்களம், சபைகள் அல்லது கூட்டுத்தாபனங்களின் தலைமை அதிகாரிகள் மூலமாக அனுப்புதல் வேண்டும்.

5. **சேவையின் நிபந்தனைகள்.**—'குழுவில்'ல் உள்ள ஊழியருக்குப் போல் அமையும்.

6. வேறு சம்பந்தப்பட்ட அறிவித்தலுடன் விண்ணப்பதாரிகள் தங்களது விண்ணப்பங்களில் தெளிவாக—

(அ) முழுப்பெயர், முகவரியும் வயதும் (பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கவும்).

(ஆ) கல்வியும் தொழில் தகைமைகளும் (அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளை இணைக்கவும்).

(இ) சிங்களம், தமிழ், ஆங்கிலத்தில் சித்திபெற்ற ஆகக் கூடிய சோதனை அத்தாட்சிப் பத்திரங்களின் பிரதிகளுடன்.

(ஈ) நற்சாட்சிப் பத்திரங்கள் வழங்கிய இரு நபர்களின் பெயர்கள், அவற்றில் ஒன்று அபேட்சகர் கடைசியாகப் படித்த கல்வி நிலையத்தின் தலைவரினுடையதாக இருத்தல் வேண்டும். நற்சாட்சிப் பத்திரங்களின் பிரதிகள் இணைக்கப்படுதல் வேண்டும்.

7. **முடிவுத் திகதி:** விண்ணப்பங்கள் 15.02.73 திகதியில் அல்லது அதற்கு முன்னதாகக் 'கொமிசனுக்கு'க் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபாலில் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
காணிச் சீர்திருத்தக் ஆணைக்குழு.

காணிச் சீர்திருத்த ஆணைக்குழு,
த. பெ. எண். 1526,
ஓ 82, கிறகிறி அவன்யூ,
கொழும்பு 7,
19 சனவரி, 1973.

1-1033—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

---

## தகவற் பகுதியின் திரைப்படப் பிரிவில்

### பிரதம தயாரிப்பாளர் பதவி

தகவற் பகுதியின் திரைப்படப் பிரிவில் பிரதம தயாரிப்பாளர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்தில் எழுதப் பெற்று பதிவு செயலாளர், தகவல், ஒலிபரப்பு அமைச்சு, சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை, கொழும்பு-1, எனும் முகவரிக்கு பின்வரும் தேதியில் அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவு அஞ்சலில் அனுப்பப்படவேண்டும். கடித உறையின் இடது கரை மேல் மூலையில் "பிரதம தயாரிப்பாளர்" என்று தெளிவாக எழுதப்படல் வேண்டும்.

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள்—28, பெப்ருவரி, 1973

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள்—07, மார்ச், 1973

குறிப்பு:—(i) விண்ணப்பப் படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகிவிட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்கு கடைசித் தேதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலேற்படும் இடருக்குத் தாமே பொறுப்பாளிகளாவர்.

(ii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள், விரும்பின், தமது விண்ணப்பங்களை விதிக்கப்பட்ட கால எல்லைக்குக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை

தகவல் ஒலிபரப்பு அமைச்சின் பதிற்செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பிவைக்கலாம்.

(iii) *மருந்துவப் பரிசோதனையும் பயணச் செலவும் :* இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட, இலங்கைக் குடியரசின் கீழ் ஊழியம் புரியும் அலுவலர்கள், சேவைக்குத் தகுதியான உடற் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா என்பதை உறுதிப் படுத்துவதற்காக மருத்துவப் பரிசோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவர். அத்தகைய மருத்துவப் பரிசோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்குப் பயணஞ் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட அலுவலரே செலுத்தல் வேண்டும்.

2. *நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும் :* இப்பதவி நிரந்தரமானது. தெரிவு செய்யப்படும் அபேட்சகர் மூன்று வருடகாலத் திற்குத் தகுதிகாண் அடிப்படையில் பணிபுரிவார். மேலும், தெரிவு செய்யப்படும் அபேட்சகர் பொதுச் சேவை சேமலாபநிதிக்குக் கொடுப்பனவு செலுத்துமாறு வேண்டப்படுவார்.

குறிப்பு :—(i) 31.12.1971 ஆந் தேதியன்று அரசாங்க சேவையில் ஓய்வூதிய உரித்துடைய பதவியை வகித்துவந்த அரசாங்க அலுவலர் இப்பதவிக்கு நியமிக்கப் பட்டால், அவர் புதிய பதவியிலும் தொடர்ந்து தனது ஓய்வூதிய உரிமையை அனுபவித்து வருவார்.

(ii) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் நிரந்தரமானதும், ஓய்வூதிய உரிமையுடைதுமான பதவியொன்றை வகித்துவரும் அரசாங்க சேவை ஊழியராகவிருப்பின், முதற்கண், அவர் ஒரு குறிப்பிட்ட காலத்திற்கு இந்தப் பதவியில் பதில் அடிப்படையில் பணிபுரிவார்.

3. *சம்பளமும் படிகளும் :* இப்பதவிக்குரிய திரட்டப்பட்ட சம்பள விகிதம் பின்வருமாறு : வருடாந்தம் ரூ. 11,400—11×480 ரூ. 16,320—ரூ. 14,400 க்கு முன்னர் வினைத் திறமைகாண் தடை உண்டு. மற்றும், அபேட்சகர் இரண்டு வருடகாலத்திற்கு ரூ. 13,920 சம்பள அடிப்படையில் பணிபுரிவார்.

*குறிப்புகள் :* தெரிவு செய்யப்படும் அபேட்சகரது தகைமைகளுக்கும் அனுபவத்திற்கும் இயைய, திறைசேரியின் அங்கீகாரத்துடன், அவருக்கு சம்பள விகிதத்தில் உயர்ந்த ஒரு சம்பள அடிப்படை வழங்கப்படும். அரசாங்க சேவையாளர் தெரிவு செய்யப்படுவாரெனின், அவரது சம்பளம், தாபன விதிகள் கோவையின் vii ஆம் அத்தியாயத்தில் உள்ள நிபந்தனைகளுக்கமைய நிர்ணயிக்கப்படும்.

4. *தேவையான தகைமைகள் :* ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும்.

(ஆ) 1973, பெப்ருவரி 28 ஆந் தேதியன்று 25 வயதுக்குக் குறையாதவராயும், 45 வயதுக்கு மேற்படாதவராயும் இருத்தல் வேண்டும். (அரசாங்க சேவையிலுள்ளோருக்கு மேல் வயதெல்லை ஏற்புடைத்தாகாது)

(இ) (i) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தின் பட்டதாரியாக அல்லது அதிலும் உயர்ந்த தகைமையுடையவராயிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) 16 மி. மீ., 35 மி. மீ. திரைப்படங்களைத் தயாரித்தல்,

(அ) விவரணச் சித்திரங்கள், செய்திச் சுருள்கள், குறுபடங்கள் போன்றவற்றை நெறிப்படுத்தல் போன்ற திரைப்படக்கடமைகள் சகலவற்றிலும் ஆகக் குறைந்தது 8 வருட கால அனுபவம் பெற்றிருத்தல்.

(ஆ) படப்பிடிப்பு, படங்கழுவல், பதித்தல், தரப்படுத்தல், ஒலிப் பதிவு செய்தல் போன்ற சினிமாக்கலையின் பல கிளைகளைப் பற்றிய உன்னத அறிவும், திரைப்படத் தயாரிப்புச் சம்பந்தமான உபகரணங்களது செயற்பாடுகள் தொடர்பான அனுபவமும் பெற்றிருத்தல்.

(இ) மேலே குறித்த சினிமாக் கலைத்துறைகளில் ஒன்றில் அல்லது பலவற்றில் பெற்றுள்ள திறமைக்கு உள்நாட்டு அல்லது வெளிநாட்டு அங்கீகாரம் பெற்ற நிறுவனங்கள் அளித்துள்ள பாராட்டுக்களைப் பெற்றிருத்தல்.

*குறிப்பு :* திணைக்களத்தைச் சேர்ந்த அலுவலர்கள், 4 (இ) (ii) பந்தியில் தேவைப்படும் அனுபவத்தைப் பெற்று, அத்துடன் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தி அல்லது சமமான அல்லது உயர்வான தகைமைகளைக் கொண்டிருப்பார்களெனின், அவர்களுடைய விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் பத்திரங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (*முக்கிய குறிப்பு :* சமயதிட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ்கள் ஏற்கப்படமாட்டாது)

(ஆ) மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ்.

(இ) குணச் சான்றிதழ் இரண்டு : இவற்றிலொன்று பாடப்பணிப் பாளர், கல்லூரி ஆசிரியர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) உயர் தொழிற்றகைமை அல்லது தொழிநுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ்.

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றில் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு : (1) பத்திரங்களையாயினும் பத்திரங்களின் படிகளையாயினும் விண்ணப்பப்படிவத்துடன் இணைக்கக் கூடாது ;

(2) பத்திரங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும் பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப் படமாட்டா.

6. அரசாங்க, அல்லது கூட்டுத்தாபன சேவையிலுள்ள அலுவலர்கள் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்கள/ கூட்டுத்தாபனத் தலைவர்களூடாக அனுப்ப வேண்டும். எனினும், அவர்கள் தாம் அவ்வாறு விண்ணப்பம் அனுப்பிய தேதியை தகவல் ஒலிபரப்பு அமைச்சின் பதிற் செயலாளருக்கு விண்ணப்ப முடிவு தேதிக்கு முன்னர் நேரடியாக அறிவித்தல் வேண்டும்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் பதிற் செயலாளர், தகவல் ஒலிபரப்பு அமைச்சு என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இவ் அமைச்சிலுள்ள எந்த அலுவலருக்காயினும் நேராக அனுப்புதல் கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம் II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டமை அறிவிக்கப் படும். விண்ணப்ப முடிவு தேதியிலிருந்து மூன்று வார காலத்துள் இந்த அறிவிப்புக் கடிதத்தைப் பெறாத விண்ணப்பதாரர் அதனை உடனடியாக தகவல் ஒலிபரப்பு அமைச்சின் பதிற் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இவ் ஏற்பாட்டுக்கமைய ஒழுகாத விண்ணப்பதாரரின் விண்ணப்பக் கோரிக்கைகள் கவனிக்கப்படமாட்டா.

என். பி. விஜேரத்ன,
பதிற் செயலாளர்,
தகவல், ஒலிபரப்பு அமைச்சு.

தகவல், ஒலிபரப்பு அமைச்சு அலுவலகம்,
சேர் பாரன் ஜயதிலக்க மாவத்தை,
கொழும்பு 1,
13, ஜனவரி, 1973.

மாதிரி விண்ணப்பப் படிவம்

தகவற் பகுதியின் திரைப்படப் பிரிவில் பிரதம தயாரிப்பாளர் பதவி

1. முழுப் பெயர் (தெளிவான எழுத்துக்களில்) :

2. அஞ்சல் முகவரி :

3. பிறந்த தேதி :

4. விண்ணப்ப முடிவு தேதியன்று சரியான வயது :
வருடங்கள்............மாதங்கள்............நாட்கள்............

5. நீர் இலங்கைப் பிரசையா ? அவ்வாறெனின், வம்சாவழி காரணமாகவா, பதிவு காரணமாகவா இலங்கைப் பிரசை எனக் குறிப்பிடுக :

6. பின்வருவோர் பிறந்த இடங்கள் :

(அ) விண்ணப்பதாரர் :

(ஆ) தந்தை :

(இ) தந்தை வழிப் பாட்டன் :

(ஈ) தந்தை வழிப் பூட்டன் :

7. (அ) பால் :

(ஆ) விவாகமானவரா, தனியாளா, கைம்பெண்ணா, தாரமிழந்தவரா :

8. பின்வருவனவற்றில் சித்தியெய்திய அதி உயர்ந்த பரீட்சை :

(1) சிங்களம் (2) தமிழ் (3) ஆங்கிலம்

9. 12 வயதிலிருந்து நீர் கல்வி பெற்ற பாடசாலைகள், கல்லூரிகள், ஏனைய நிறுவனங்கள் :

| பொதுக் கல்வி | தொழிற் கல்வி |
|---|---|
| 1. | 1. |
| 2. | 2. |
| 3. | 3. |
| 4. | 4. |
| 5. | 5. |

10. விளையாட்டுத் துறையில் பெற்ற திறமைகள், அத்துறையில் நீர் வகித்த பொறுப்பு வாய்ந்த பதவிகள் என்பனபற்றிய விபரங்கள்.

11. (அ) நீர் கடன் தொல்லைகளிலிருந்து விடுபட்டுள்ளீரா ? அல்லாது விடின் கடன்களின் தொகை என்ன ?

(ஆ) எப்போதாவது நீதிமன்றத்தில் குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்றவாளியாகக் காணப்பட்டுள்ளீரா ? அவ்வாறெனின், தேதிகள் நீதிமன்ற வழக்கு இல. என்பவற்றையும் குறிப்பிட்டு, முழு விபரங்கள் தருக.

12. கல்விசார், தொழில்சார் தொழில் நுட்பத் தகைமைகள் : (பெற்றுக்கொள்ளப்பட்ட சகல பட்டங்கள், விசேடத்துவங்கள், தொழில்சார், தொழில் நுட்பத் தகைமைகள், என்பவற்றின் விவரங்களையும், நிறுவனங்களின் பெயர்களையும் தருக.)

13. தற்போதைய தொழிலும், முன்னைய நியமனங்களும் (ஏதாவது இருப்பின்) (அப்பதவிகளின் சேர்ந்த தேதிகளும், விலகிய தேதிகளும், இறுதியாகப் பெற்ற வருடாந்தச் சம்பளமும் குறிப்பிடப்பட வேண்டும்.)

பதவி தொடக்கம் வரை வருடாந்தச் சம்பளம் ரூபா

முக்கிய குறிப்பு : அரசாங்க சேவையிலிருந்து விலகியிருப்பின், அதற்கான காரணம் 15 ஆம் பந்தியின் கீழ் காட்டப்பட வேண்டும்.

14. விசேட தகைமைகள் : அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட/தகைமைகள்/அனுபவம் உள்ளனவா ? அவ்வாறெனில், அவற்றின் விபரங்களைத் தருக.

15. ஏனைய விபரங்கள் :

16. இந்த விண்ணப்பத்தில் அளிக்கப்பட்டுள்ள விபரங்கள் உண்மையானவை எனவும் செம்மையானவை எனவும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். மேலும், இங்கு கொடுக்கப்பட்ட விபரங்கள் உண்மையற்றவை அல்லது செம்மையற்றவை என, தேர்விற்கு முன்னர் கண்டுபிடிக்கப்பட்டால் எனது விண்ணப்பத் தகைமை அற்றுவிடுமெனவும், தேர்விற்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் இழப்புப்பணக் கொடுப்பனவு எதுவுமின்றி பதவியிலிருந்து விலக்கப்படுவேன் எனவும் நான் அறிந்திருக்கிறேன்.

விண்ணப்பதாரரின் ஒப்பம்.

தேதி : ........................

அபேட்சகர் அரசாங்க சேவையில் உள்ளவரெனின்,

திணைக்களத் தலைவரின் அறிக்கை :

1-945—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

## பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

ஆங்கில ஆசிரியர் பரீட்சை—மார்ச் 1973

மேற்படி பரீட்சை கீழ்க் குறிப்பிடப்படும் பரீட்சை நிலையங்களில் 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி நடைபெறும்.

**பரீட்சை நிலையங்கள் :**

அம்பலாங்கொடை, அனுராதபுரம், வதுளை, பண்டாரவளை, மட்டக்களப்பு, கொழும்பு, தம்புல்லை, திக்வலை, எகலியகொடை, கல்கமுவை, காலி, ஹோமாகம, ஹொரணை, யாழ்ப்பாணம், களுத்துறை, கண்டி, கேகாலை, குளியாப்பிட்டி, குருநாகல், மாத்தளை, மாத்தறை, மொனருகலை, நாவலப்பிட்டி, நீர்கொழும்பு, நுவரெலியா, பருத்தித்துறை, பொல்லநறுவை, இரத்தினபுரி, திரிகோணமலை, வவுனியா, வியாங்கொடை.

2. மாதிரி விண்ணப்பப் படிவம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது. இவை 8″ × 13″ அளவினதாய கடதாசியில் முறைப்படி தயாரிக்கப்பட்டு விண்ணப்பப் படிவம் (தட்டெழுத்து மூலம் தயாரிக்கப்படின் நன்று) 1973 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 23 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத் தபால் மூலம் பரீட்சாதிகாரி, பரீட்சைத் திணைக்களம், மலே வீதி, கொழும்பு 2 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். பரீட்சாதிகாரியின் அல்லது அங்கு கடமையாற்றும் வேறு ஊழியர்களினது தனிப்பட்ட முகவரிக்கு அனுப்பி வைக்கப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

வர்த்தமானப் பத்திரிகையிற் கொடுக்கப்பட்ட மாதிரிப் படிவத்தை ஒத்திராத. பரீட்சார்த்திகளால் தம் எண்ணப்படி தயாரித்து அனுப்பப்படும் விண்ணப்பங்களும், விண்ணப்பங்களை ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்களும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

3. பரீட்சார்த்திகள் தமது விண்ணப்பங்களைப் பரீட்சாதிகாரிக்கு அனுப்புவதற்கு முன்னதாக 1965 ஆம் ஆண்டிலும் அதன் பின்வரும் நடைபெற்ற ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்காய பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் வாசித்து அவற்றைப் பற்றிய பூரண விளக்கத்தைப் பெறுதல் வேண்டும்.

மேற்படி பிரமாணங்களின் திருத்தங்களிற்கு இவ்வர்த்தமானியின் ஆங்கில அறிவித்தலைப் பார்க்கவும்.

4. இப்பிரமாணங்களையும் பாடத்திட்டங்களையும் நேரிற் பெற விரும்புவோர் கல்வி அமைச்சில் உள்ள கல்வித் தகவல் நிலையத்தில் இருந்தும் அரசாங்க வெளியீட்டு அலுவலகத்திலிருந்தும் 50 சதத்திற்குப் பெற்றுக்கொள்ளலாம் ; தபால் மூலம் பெற விரும்புவோர் தமது கடிதத்துடன் 1 ரூபா 35 சதத்திற்குரிய காசுக்கட்டளையையேனும் அல்லது அஞ்சற் கட்டளையையேனும் பரீட்சாதிகாரிக்கு அனுப்பினால் அவர்களுக்கு இது அனுப்பிவைக்கப்படும்.

5. விண்ணப்பப் படிவத்தின் 14 ஆம் கூட்டில் பரீட்சார்த்தியின் கையொப்பம் கீழே குறிப்பிடப்பட்டுள்ள தகுதியுடைய ஒருவரால் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.

(i) ஆசிரியராக இருக்கும் பரீட்சார்த்தி தான் படிப்பித்துக் கொண்டிருக்கும் பாடசாலைத் தலைவர் முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டு, அதனை உறுதிப்படுத்திக் கொள்ளுதல் வேண்டும்.

(ii) ஆசிரியர் சேவையிலில்லாத பரீட்சார்த்தி இப்படிவத்திற் கேட்கப்பட்டுள்ள உறுதிப் பத்திரத்தை சமாதான நீதிவான், சத்தியப் பிரமாண அதிகாரி, வழக்கறிஞர் அல்லது நொத்தாரிசு, 4,800 ரூபாவையேனும் அதற்கு மேற்பட்ட தொகையையேனும் வருடாந்தச் சம்பளமாகப் பெறும் நிரந்தர அரசாங்க உத்தியோகத்தர் அல்லது தரைப்படை,

கடற்படை, ஆகாயப்படை ஆகியவற்றிலுள்ள ஆணை பெற்ற உத்தியோகத்தர், அரசாங்க, கல்வி அதிகாரியின் முகாமைக்குட்பட்ட அல்லது அங்கீகாரம் பெற்ற பாடசாலை அதிபர் அல்லது அத்தகைய பாடசாலையின் ஓய்வு பெற்ற அதிபர், அப்பகுதியின் கிராமசேவகர், புத்தவிகாரைக்குப் பொறுப்பாக உள்ள பிக்கு, தலைமைப் பிக்கு, வேறு மதபீடங்களுக்குப் பொறுப்பாகவுள்ள மதகுருமார், மதிப்பிற்குரிய வேறு சமயப் பெரியார்கள் ஆகியோர்களில் ஒருவரைக் கொண்டு உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.

மேற்கூறிய தகுதிவாய்ந்த ஒருவரால் பரீட்சார்த்தியின் கையொப்பம் உறுதிப்படுத்தப்பட்டது என்பதற்குப் பரீட்சார்த்தியே முழுப் பொறுப்பாளியாவர்.

போகொட பிரேமரத்ன,
பரீட்சாதிகாரி.

பரீட்சைத் திணைக்களம்,
கொழும்பு-2,
1973 ம் ஆண்டு ஜனவரி மீ 8 ந் வ.

### இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்

### 1973 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தில் நடைபெறும் ஆங்கில ஆசிரியர் பரீட்சைக்கான விண்ணப்பப் படிவம்

பரீட்சையின் எப்பகுதிக்குத் தோற்றுகிறீர் :

சுட்டிலக்கம் :
(அலுவலக உபயோகத்திற்கு மாத்திரம்).

................................
(இங்கே "ஏ" அல்லது "பீ" எனப் பெரிய எழுத்தில் எழுதுக).

1. பரீட்சார்த்தியின் வழமையான கையொப்பம் :————.
ஆணு/பெண்ணு :————.

2. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் :————.
(வண./திரு./திருமதி/செல்வி என்பதைத் தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும். ஆசிரியராயின் உத்தியோகத்தில் வழங்கும் பெயரினை எழுதுதல் வேண்டும். அன்றேல் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தில் உள்ள பெயரினை எழுதுதல் வேண்டும்).

3. நிரந்தர முகவரி :————.
உத்தியோக முகவரி :————.

4. பரீட்சை நிலையம் (விருப்பத்திற்குரிய வரிசைக் கிரமப்படி எழுதுக) :
(1) :————.
(2) :————.
(3) :————.
(மூன்று நிலையங்களும் வேறு வேருய் இருத்தல் வேண்டும்)

5. பரீட்சைக் கட்டணம் சம்பந்தமாகத் தேவையான முத்திரைகளை இங்கே ஒட்டுக. (ஆங்கில ஆசிரியர் பரீட்சை "ஏ" பிரிவிற்கு ரூபா 25, "பீ" பிரிவிற்கு ரூபா 20)

| |
|---|
| முத்திரை ஒட்டும் இடம். இம்முத்திரை பரீட்சார்த்தியின் கையொப்பமும் திகதியும் இடப்பட்டுப் பயனற்றதாக்கப்பட வேண்டும். முத்திரைகள் ஒன்றையொன்று மருவாத வகையில் ஒட்டப்படல் வேண்டும். |

6. இலங்கை பிரஜா உரிமை.
வம்சாவழியிலா அல்லது பதிவு செய்ததினுலா, பதிவு செய்து கொண்டதாயின் அத்தாட்சிப் பத்திரத்தின் இலக்கத்தைக் குறிப்பிடுதல் வேண்டும்.

7. (i) பிறந்த திகதி :————.
(ii) 1973 ஜனவரி 1 ஆம் தேதியன்று வயது :——
வருடம் :———— ; மாதம் :———— ; நாள் :————.

8. (i) சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரப் பரீட்சையிற் சித்தியெய்திய—
வருடம் :———— ; மாதம் :———— ; சுட்டிலக்கம் :————.
வருடம் :———— ; மாதம் :———— ; சுட்டிலக்கம் :————.
(ii) கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தரப்) பரீட்சையிற் சித்தியெய்திய—
(i) வருடம் :———— ; மாதம் :———— ; சுட்டிலக்கம்.
(ii) வருடம் :———— ; மாதம் :———— ; சுட்டிலக்கம்.
(iii) ஆங்கிலப்பாஷை "அ" பாடத்திட்டத்திற் சித்தியெய்திய—
வருடம் :———— ; மாதம் :———— ; சுட்டிலக்கம் :————.
வருடம் :———— ; மாதம் :———— ; சுட்டிலக்கம் :————.
(iv) ஆங்கிலப்பாஷை "ஆ" பாடத்திட்டத்திற் திறமைச் சித்தியாயின்—
வருடம் :———— ; மாதம் :———— ; சுட்டிலக்கம் :————.

9. ஆங்கில ஆசிரியர் தராதரப் பத்திரப் பரீட்சையில் "பீ" பிரிவிற்குத் தோற்றுவதாயின் "ஏ" பிரிவிற் சித்தியெய்திய—
வருடம் :———— ; மாதம் :———— ; சுட்டிலக்கம் :————.

10. ஆசிரியரின் பதிவிலக்கத்தை அல்லது நியமனக் கடிதத்தின் இலக்கத்தை அல்லது மகா கல்வியதிபதி அல்லது பிரதேசக் கல்வி அதிகாரியிடமிருந்து நியமன அங்கீகாரம் பற்றிய உறுதிக் கடிதத்தின் விபரத்தை இங்கே குறிப்பிடுக.

11. தாம் சித்தியடைந்த வேறு பரீட்சைகளின் அல்லது சேவையின் அடிப்படையில் சலுகை கோரின் அது பற்றிய விபரம் :————.
சலுகை கோரும் பகுதி:————.

12. சேவையிலுள்ள ஆசிரியர்களுக்கு மாத்திரம் :
இப்பகுதி பாடசாலை முகாமையாளரால் அல்லது தலைமை ஆசிரியரால் நிரப்பப்படல் வேண்டும்.

இப்பரீட்சார்த்தி சம்பந்தப்பட்ட சகல கடிதக் குறிப்புக்களையும் பரிசீலனை செய்தேன் எனவும், அவற்றின்படி, இவ்விண்ணப்பத்தின் 7 ம் 8 ம் கூடுகளிலுள்ள விபரங்கள் சரியானவை எனவும் நான் உறுதிப்படுத்துகிறேன்.

பாடசாலையின் பெயர் :————.

பாடசாலை முகாமை :————.

(அரசாங்க/கல்வியதிபதியின் முகாமைக்குட்பட்ட/உதவி நன்கொடை பெருத அனுமதி பெற்ற பாடசாலையா எனக் குறிப்பிடுக.)

கையொப்பம் :————.
பெயர் :————.
முகவரி :————.
திகதி :————.

13. பரீட்சார்த்தியின் உறுதிக்கூற்று.—இவ்விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்ட விபரங்கள் யாவும் உண்மையானவை எனவும், இங்கு ஒட்டப்பட்ட முத்திரை என்னுல் ஒட்டப்பட்டதெனவும், இது இதன் முன் பயன்படுத்தப்படாத பெறுமதியுள்ள முத்திரை எனவும் நான் உறுதி கூறுகிறேன். இப்பரீட்சை சம்பந்தமாகப் பரீட்சாதிகாரியாற் பிரசுரிக்கப்படும் பிரமாணங்களுக்கும் பரீட்சார்த்தி பரீட்சைமண்டபத்தில் கீழ்ப்படிந்து ஒழுகவேண்டிய விதிகளுக்கும் ஒரே முகமாக இணங்கி நடப்பதற்கு உடன்படுகின்றேன்.

————,
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி :————

14. பரீட்சார்த்தியின் கையொப்பத்தை உறுதிப்படுத்தல் : (எல்லாப் பரீட்சார்த்திகளுக்கும்)

........................................ஆகிய நான் மேற்கூறிய பரீட்சார்த்தி ........................................என்னுமிடத்தில் வதிபவர் எனவும், எனக்கு அவரை நன்கு தெரியும் எனவும், 1973 ஆம் ஆண்டு ......................மாதம் ......................ந் திகதி எனது முன்னிலையில் தனது கையொப்பத்தை இட்டாரெனவும் உறுதிப்படுத்துகிறேன்.

————,
உறுதிப்படுத்தியவர் கையொப்பம்.

பெயர் :————. தகுதி :————.
முகவரி :————. திகதி :————.

*பரீட்சைத் திணைக்களம், இலங்கை*

*பரீட்சார்த்திகள் கவனிக்கவேண்டிய விதிகள்*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்து கொள்ளவேண்டும். விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சாதிகாரியின் விரகின்படி கிழ்க்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர் :—

(i) மூலப் பரீட்சையிலிருந்தும் நிறுத்தி வைக்கப்படுவர் அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்தி வைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் ஒரு பகுதியிலிருந்தோ நிறுத்தி வைக்கப்படுவர்.

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர்.

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(iv) சீவியகாலம் வரை பரீட்சைக்குத் தோற்றுதவாறு தடுத்து வைக்கப்படுவர்.

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமற் தடுத்துவைக்கப்படுவர்.

(vi) பரீட்சார்த்தியின் நடத்தைபற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விஷயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்துவிடல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும் பொழுதோ, பரீட்சைக்குப் பின்னரோ, தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சாதிகாரி தீர்மானித்தால், அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும் எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம், அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

**விதிகள்**

*1.* ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணுது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் பொழுதும் வெளியேறும் பொழுதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்து கொள்ளுதல் வேண்டும்.

*2.* பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும் பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரதும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவி செய்தல் வேண்டும்.

*3.* பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்யவேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றப் பரீட்சார்த்திகளுடனே வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படமாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானல் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

*4.* மேற்பார்வையாளரால் ஒழுங்கு செய்யப்பட்ட மேசையை விட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக் கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமுஞ் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்கு செய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்து கொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

*5.* பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தை தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவார். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்படமாட்டாது.

*6.* பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந் தாளையோ வேறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடையெழுதுந் தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாருக நடந்து கொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக்கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

*7.* வினத்தாள் கொடுக்கப்பட்ட அரைமணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனும்திக்கப்படமாட்டார். இந்த நேர எல்லை கழிந்தபின்னர்தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேகவும் அனுமதிக்கப்படுவர்; செய்கை முறை அல்லது வாய்மொழிப் பரீட்சையைப் பொறுத்த வரையில் தாமதித்து வந்த ஒரு பரீட்சார்த்தியை, மேற்பார்வையாளர் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

*8.* ப்ரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றைத்தாளிலோ வினத்தாளிலோ மேசையிலோ வேறேந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணுக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்து கொண்டதாகக் கருதப்படுவர்.

*9.* ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலும் சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியனவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச் செல்லல் ஆகாது. ஒரு வினவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டி விடுக. இவ் விதிக்கு மாருக நடந்தால் அது ஏமாற்றுவதற்கான எத்தனமெனக் கருதப்படும்.

*10.* கணித சம்பந்தமான வினக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனே செய்கை வழியில்லாமலோ சரியான விடைகளிருந்தால் சித்திரத்தில் அலங்காரரூபச் சித்திரமும் கருத்துவெளிபாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினேடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

*11.* பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களை விட வேறு தாள்களையோ வைத்திருக்கக்கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப் பெட்டியையோ கணிதக் கருவிப் பெட்டியையோ விட கைப்பை, அழகு செய் செப்பு, பார்சல் முதலியவற்றை, கோவை, அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப் பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக்கூடாது. இப் பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்குள்ளாவார்கள்.

*12.* பரீட்சை மண்டபத்துக்குள்ளிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகமோ குறிப்புகளோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்குத் தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் எவையெனக் கூறிவிடவேண்டும். இந்நிபந்தனைகளை மீறினல் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருத்தப்படுவர்.

*13.* தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தை விட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பங்களிலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனல் ப்ரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்ல விடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும் பொழுதும் மீண்டுவரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

*14.* பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக் கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேருெரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக் கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேருெரு பரீட்சார்த்திக்கு உதவி செய்யவும் அப் பரீட்சார்த்தியிடமிருந்தோ உதவி பெறவுங் கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொருந் தாளும் எழுதப்படும் தாளின் கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக் கூடாது.

*15.* பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேருெருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

*16.* பரீட்சார்த்தியல்லாத ஒருவர் ஒரு பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமாகக் கருதப்படும்.

பரீட்சார்த்திகளுக்கு—

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக் கருதி மேல்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும் :—

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்தி லும் பார்க்க குறைந்தபட்சம் 10 அல்லது 15 நிமிடங் களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன் நாளே விசாரித்து அறிந்துகொள்ளவேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்று தற்குரிய தகுதியைப்பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப் பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிட மிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். அல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்துக்குத் தோற்றும் தகைமை நிரா கரிக்கப்படக் கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப் பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப் பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழு தும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டுவருதல் வேண்டும். தேவையான உறுதிப் பத்தி ரங்களை நீர் வைத்திருக்காவிடின் பரீட்சைக்குத் தோற் றும் உமது தகைமை நிராகரிக்கப்படக்கூடும். உண்மை பற்றிய சான்றுப் பத்திரங்களைக் கொண்டுவர மறந்து போனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்ப தாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால், அதைப் பற்றி மேற்பார்வையாள ருக்கு உடனே அறிவித்தல் வேண்டும். உமக்கெனக் கோடு படாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தா மல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடு கள் கொடுபட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உப கரணக்கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப்பென் சில்கள், வர்ணக் கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதிசெய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்தி கள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத் தையும் கண்டிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடை யெழுதும் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவும் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில், ஒவ்வொரு வெற் றுக்கோடுகள் விடப்பட வேண்டும். முழுவிடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்படவேண்டும் அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருங்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடது பக்க அடைப்பில், வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு பரீட்சகரின் உபயோகத்துக் காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமான கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளின் முறையான அமைப்பு முறையில் தருக. வரை படங்கள், கோட்டுருபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரை படத்தை அல்லது, கோட்டுருபத்தை அல்லது சிறு படத்தைக் காட்டி எழுதப்படும் விடை விடைத்தாளின் மறுபக்கத்திலும் தொடரப்படுமானால், அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப் படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்று சேர்த்து இடது பக்கத்து மேல் மூலயில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள், தெரி வுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக் கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களை நேரடியாக மேற்பார்வையாள ரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய் யத் தவறினால் உமது விடைத்தாள் காணமற்போய் இப் பாடத்துக்கு நீர்வரவில்லையென எண்ணப்படும். எக்கார ணம் பற்றியும் சேவகர்களிடமோ பணியாளிடமோ விடைத் தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெற வேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக் காட்ட வேண்டும்.

போகொட பிரேமரத்தின,
பரீட்சை ஆணையாளர்.

பரீட்சைத் திணைக்களம்,
மலே வீதி, கொழும்பு 2,

1-953—26.01.73 ந் திகதிய வர்த்தமானி இல. 44

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

ஸ்ரீ லங்கா (இலங்கை) குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானி களுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாச தாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை 1973**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| **சனவரி** | 5.1.73 | வெள்ளி | 27.12.72 | புதன் | ந.ப. 12.00 |
| | 12.1.73 | வெள்ளி | 3.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.1.73 | வெள்ளி | 10.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 26.1.73 | வெள்ளி | 17.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| **பெப்புருவரி** | 2.2.73 | வெள்ளி | 24.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.2.73 | வெள்ளி | 31.1.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 15.2.73 | வியாழன் | 7.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.2.73 | வெள்ளி | 14.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| **மாச்சு** | 2.3.73 | வெள்ளி | 21.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 9.3.73 | வெள்ளி | 28.2.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 16.3.73 | வெள்ளி | 7.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 23.3.73 | வெள்ளி | 14.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 30.3.73 | வெள்ளி | 21.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| **ஏப்பிறில்** | 6.4.73 | வெள்ளி | 28.3.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 11.4.73 | புதன் | 4.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 19.4.73 | வியாழன் | 11.4.73 | புதன் | ந.ப. 12.00 |
| | 27.4.73 | வெள்ளி | 18.4.73 | புதன் | ந.ப. 12.00 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் வ.

ஸ்ரீ லங்கா (இலங்கை) அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.